விருத்தாசல

புராண வசனம்.

இதன்

ஆக்கியோன்

சிதம்பரம்

சு. இராஜமாணிக்கம்பிள்ளை.

ஸ்ரீ வேலன் அச்சுக்கூடம்,

சிதம்பரம்.

Registered Copy - Right.

1927. [அணா 4.

OFFICE OF THE REGISTRAR OF ...
16 FEB
... MADRAS

விலை அணா 4.

N27
85957

669
A
224535

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

திருமுதுகுன்றமென்னும்

விருத்தாசல புராணம்.

OFFICE OF THE REGISTRAR OF ... 16 FEB 1927 MADRAS

இஃது
யாவருக்கும் எளிதில்
உபயோகமாகும் பொருட்டு,

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்
சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்
ஸ்ரீமான் ச. விசுவநாதபிள்ளையவர்கள்
அநுமதிப்படி

சிதம்பரம் நாவலர்தமிழ்க்கலாசாலை யுதவிபாசிரியர்
சு. இராஜமாணிக்கம்பிள்ளையால்
வசனவடிவமாக எழுதி,

சிதம்பரம்
ஸ்ரீ வேலன் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்] அக்ஷயஹு தைமீ [இதன்விலை அணா 4.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

அமிழ்தினுமினிய தமிழ் மொழியை அன்புடன் போற்றி வளர்த்த புண்ணியசீலரும் சைவப்பிரசங்கஞ் செய்வதிற் சமர்த்தரும், அவையஞ்சி மெய்விதிரா ஆண்மையிற் சிறந்தவரும், கேட்டார்ப்பிணிக்குந்தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் வாக்குநலத்தில் வல்லவரும், எத்தானத்திலும் உத்தம தானமாகிய வித்தியாதானப் பெருந்தருமஸ்தாபகரும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் மாணாக்கரின் மாணாக்கரும், அவர் தம் பெருந்தருமங்களைப் பொன்னேபோற் போற்றி வளர்த்த புமானும் என்னை நன்னிலையிலூக்கி முன்னுக்குக் கொண்டுவந்த நன்மையாளரும் வித்யாகுருவுமாகிய ஸ்ரீமத் ச. பொன்னம்பலபிள்ளையவர்கள் பொற்பாதகமலங்களைத் துணைகொண்டு அவர்களின் ஞாபகார்த்தமாக முன் முன்னாக இந்நூலை எழுதத் துணிந்தனன்.

விருத்தாசலத்திற்கு ஒருதரம் போயிருந்தபொழுது அதன் பெருமை முதலியவைகளைக் கேட்டுப்படிக்க, பேராவல் கொண்டு பார்த்தஅளவில் அப்புத்தகம் அச்சிடப்படவில்லை என்று அறிந்து என்போல்வாரும் பெருமைகளைத்தெரிந்துகொள்ளும்படி, துறையூர் ஸ்ரீ சிவப்பிரகாசதேசிக ராதீனம் ஸ்ரீமத், ஞானக்கூத்த சிவப்பிரகாச தேசிகரவர்கள் செய்தருளிய விருத்தாசலபுராணம் செய்யுள் ரூபமாயிருப்பதுகருதி அதற்குச்சிறிது மாறுபடா வண்ணம் என் சிற்றறிவுக்கெட்டிய வரை வசனவடிவமாக எழுதி நாவலர் பெருமான் தருமவித்தியாசாலைத்தருமபரிபாலகரும் அன்பு, அறிவு, சாந்தம் ஆதிய நன்மைக்குணங்கள் அமையப்பெற்றவரும் ஆகிய ஸ்ரீமான் ச. விசுவநாதபிள்ளையவர்களின் பேராதரவுடன் அச்சிற்பதிப்பித்துள்ளேன்.

ஆசிரியர் கருத்துக்கு ஒரு சிறிதும் மாறுபடாவண்ணம் உரைவரையவல்ல அறிவிற்சிறந்த ஆன்றோர்கள்பலர் செய்யத்தக்க இந்த அரும்பெருஞ் செய்கைக்கு அருகனல்லாத சிறியேன் எழுதிய இச்சிறுபுத்தகத்தில், பிழைகளே பெரும்பாலும் பெருகிக்கிடத்தல் திண்ணம். அறிவுடையவர்கள் குற்றங்களைப்பொறுத்துக் குணங்களைக் கொள்ளுமாறு பன்முறை வந்திக்கின்றேன்.

அடியேனை ஒரு பொருளாகஎண்ணி என் வேண்டுகோட்கிணங்கி விலையேறப்பெற்ற அருமையான நேரத்தை ஆசீர்வாத முகத்தான், சிறப்புப் பாயிரஞ் செய்தருளிய தில்லைவாழந்தணரு ளொருவராகிய உபந்யாச ரத்னாகரம் பிரம்மஸ்ரீ வி. எஸ். சிவகாமசுந்தரதீக்ஷிதரவர்கள் திருவடிகளை வணங்கித் துதித்து வாழ்த்துகின்றேன்.

இன்னும் இதற்கு இன்றியமையாத் துணையாயிருந்து உதவிசெய்த மற்றும் என் அன்பர்களின் செய்கைக்கும் என்றும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டவனாகின்றேன். இவையெல்லாம் முற்றுவித்தருளிய சிற்சபை பொலியத் திருநடம்புரியும் அற்புதக்கூத்தனும் நடராஜப்பெருமான் திருவருளை மனமார வந்தித்து வாழ்த்துகின்றேன்.

சு. இ.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப் பாயிரம்.

அன்பார்ந்த சிவபக்த சிகாமணிகளாகிய தமிழ்மக்களே!

ஸ்ரீமத் அகண்ட பரிபூர்ண ஸச்சிதானந்த நித்யசுத்தாத்வைதப் பெருங்கருணைத் தடங்கடலாகிய பரமசிவம், அபார ஸம்ஸார ஸாகரத்தில் அநாதிகாலமாக மூழ்கி வருந்துகின்ற ஆன்மகோடிகளுக்கு நிஜஸ்வரூபத்தைக்காண்பித்துத் தன்சரணாம்புஜத்தில் அபேதானந்த முக்தியைத் தந்தருள, அநேக திவ்யசிவஸ்தலங்களில் திருக்கோலங்கொண்டு அருள்புரிந்து வருகின்றாரென்பது வேத லோக ஸுப்ரஸித்த விஷயம்.

மேற்கூறியவாறு சிவஸ்தலங்கள் பலவற்றுள் மிகச்சிறப்பு வாய்ந்ததும், க்ஷேத்ரம், தீர்த்தம், மூர்த்தி என்ற முக்குணாதிசயங்கள் நிரம்பப்பெற்றதும், பதினெண் புராணங்களுள்ஒன்றாகிய ப்ரஹ்மவைவர்த்தமென்ற புராணத்தில் புகழ்ந்தோதப்பெற்றதும், பராபரவித்யைகளாலும்அறிதற்கரிய மாஹாத்மியங்களோடுப்ரகாசிக்கின்றதுமான "விருத்தாசலக்ஷேத்ரமாஹாத்மியமானது முதன்முதலில் ஸ்ரீமத் விருத்தாசலேச்வரரால் விருத்தாம்பிகைக்கு உபதேசித்தருளப்பெற்றது.

பரமன் பிறகு ஸ்ருஷ்டிகர்த்தாவாகிய ஹிரண்யகர்ப்பருக்கு உபதேசித்தார். இவ்விரண்யகர்ப்பரிடமிருந்து முறையாக வேதவ்யாஸர் நன்றாய்க் கிரஹித்தார். பின்னர் வ்யாஸமுனிவர்தாமுணர்ந்தவ்ருத்தாசலபுராணத்தைத் தன் அன்பனாகிய ஸூதருக்குத்திருவாய்மலர்ந்தருளினார். பௌராணிகோத்தமராகிய ஸ்ரீமத்ஸூதமஹாமுநிவர் தபச்ரேஷ்டர்களாகிய, நைமிஷீயமஹர்ஷிகளுக்கு அளவற்றஆனந்தத்துடன் போதித்தார். கூறியவாறுசிஷ்யபரம்பரையாகப்ராப்தமான இவ்விருத்தாசலபுராணத்தை எக்காலத்தும் எல்லோர்க்கும் உதவுமாறு ஸ்ரீமத் வேதவ்யாஸர் தமதுவாக்வல்லபத்தால் 10-வது புராணமாகிய ப்ரஹ்மவைவர்த்தத்தினிடையே சேர்ப்பித்தார்.

இவ்விதவைபவங்களோடுப்ரகாசிக்கும்விருத்தாசலபுராணம் வடமொழியைக்கற்றுணர்ந்த பண்டிதர்களுக்குமாத்ரம் பயன் அளிப்பதையும் ஏனையோர்க்குப்பயனளியாததையும் கண்ட திருக்கைலாசபரம்பரையைச்சேர்ந்த துறையூர் ஞானக்கூத்தசிவப்பிரகாசதேசிகர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானக்கூத்த சிவப்பிரகாசதேசிகர் அவர்கள் எந்நாட்டிலும் நன்னாடாகிய இத்தென்னாட்டிலேதமிழ்மக்கள்நன்குணர்ந்து ஒழுகி ஆனந்தமுறவெண்ணி செந்தமிழ்ப் பாஷையிலே "விருத்தாசல புராணத்தைச் செய்யுளாகச்செய்து வெளியிட்டார்.

சிறப்புப் பாயிரம்.

இத்தமிழ்ச்செய்யுள் "விருத்தாசல புராணம்" தமிழ்ப்பாஷையை நன்றாய்க் கற்றுணர்ந்த பண்டித ஜனங்களுக்குமாத்ரம் பயன்படுவதையும், ஸாமரன்யக் கற்றறிவாளர்கட்குப் பயன்படாததையுங்கண்டு, பாலர்முதற் பண்டிதர் வரையில் எல்லோரும் படித்துப்பயன்பெறவெண்ணி, சிதம்பரம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் தமிழ்க்கலாசாலை ஆசிரியர் மகா-ா-ா-ஸ்ரீ சு. ராஜமாணிக்கம்பிள்ளை அவர்களால் மிக்கவன்போடும், ச்ரத்தையோடும், நன்முயற்சியோடும், செவ்வனே விளங்கும்படிக்குச் செந்தமிழ் நடையில் மூலப்ரதிக்கு விரோதமின்றிச் சுருக்கமாகவும், ஸரஸமாகவும், ஸரளமாகவும் மேற்சொல்லிய விருத்தாசல புராணம் கத்யரூபமாக எழுதிமுடிக்கப் பெற்று, அச்சிட்ட பிரதி ஒன்று அன்போடு ஷை பிள்ளை அவர்களால் தரப் பெற்றேன். ... ...

நம் தமிழ்மக்களுக்கென்றே மிகப்ரயாஸத்துடன் எழுதிய கத்யரூபமான "ஸ்ரீமத் விருத்தாசலபுராணத்தைத் தமிழ்மக்களாகிய தாங்களும் ஏனையோரும்வாங்கிப்படித்து, அதன்படி ஒழுகி ஸ்ரீமத் விருத்தாம்பிகா ஸமேத ஆனந்தஸாகர ஸார்வ பௌம ஸ்ரீமத் விருத்தாசலேச்வர பாதபத்ம நிழலில் நீடூழிவாழஎல்லாம்வல்ல ஸ்ரீமந் நடராஜமூர்த்தியைப் பிரார்த்திக்கிறேன். ... ...

இப்படிக்கு,

உபந்யாஸரத்னாகரம்,

அக்ஷய ஹூ
தைமீ 29௳
11—2—1927.

வி: எஸ். சிவகாமஸுந்தர தீக்ஷிதர்,
6, தெற்குஸந்நிதி, சிதம்பரம்.

சிதம்பரம் நாவலர் தமிழ்க்கலாசாலைத் தமிழுபந்யாசகர்

பிரம்மஸ்ரீ

வித்வான் N. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள்

இயற்றிய சிறப்புப் பாயிரம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

கந்தனை யளித்த கன்னியோர் பாகன் காமுறு பழமலைப் புராணம்
செந்தமிழுரையாற் செய்தனன் றில்லைச் சீர்பெறு மிராஜமாணிக்கன்
பைந்தமிழ் கமழு நாவலர் கழகப் பண்டித னுவலர் தரும
முந்துற வளர்த்த மொய்கொள்சீர்ப் பொன்னம்பலவனென் முதல்
[வனற்சீடன்

சருக்கவகராதி.

	சருக்கம்.	பக்கம்.
1.	அகத்தியச் சருக்கம்	7
2.	அன்பர் பூசைச் சருக்கம்	34
3.	உருத்திராக்கச் சருக்கம்	42
4.	கடவுள் வணக்கம்	1
5.	கலிங்கச் சருக்கம்	28
6.	கலியகல் சருக்கம்	30
7.	கோபர்வதச் சருக்கம்	45
8.	சசிவன்னச் சருக்கம்	48
9.	சிவகீர்த்திச் சருக்கம்	43
10.	சிவபூசாவிதிச் சருக்கம்	35
11.	சுவேதச் சருக்கம்	32
12.	தலச்சருக்கம்	9
13.	தீர்த்தச் சருக்கம்	11
14.	நிருத்தச் சருக்கம்	23
15.	பிருடிதச் சருக்கம்	47
16.	புராண வரலாறு	3
17.	விதர்க்கணச் சருக்கம்	16
18.	விபசித்துச் சருக்கம்	19
19.	விபூதிச் சருக்கம்	40
20.	விருத்தகிரிச் சருக்கம்	4

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி	பிழை.	திருத்தம்.
8	19	செல்தல்	செய்தல்
14	16	திலகனுகிய்	திலகனுப்
17	25	கதையக்	கதையைக்
23	1	மதத்த	மதத்தா
,,	3	வெஞ்சு	லெஞ்சு
,,	4	ணந்தனன்	னைந்தனன்
	21	இரண்டாரக்	இரண்டறக்
27	21	அகனை	அதனை
41	2	வேதகங்ளை	வேதங்களை
,,	17	விளம்புமு	விளம்பும்
	30	அருளுட	அருளுடை
	24	குவித்து	காங்குவித்து
44	10	மாணுந்தத்தல்	மாணுந்தத்தில்
48	21	பதவிகளை	பதவிகளைப்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விருத்தாசல புராணம்.

கடவுள் வணக்கம்.

ஆழத்துப்பிள்ளையார்.

திருவுங்கல்வியுஞ் சீருந்தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக்காய்க்கவும்
பருவமாய்நம துள்ளம்பழுக்கவும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப்பேணுவாம். 1

திருமுதுகுன்றநாதர்.

திருமாலுநான்முகனுந் தேவர்கோவுந்
தேவர்களும்யாவர்களுஞ் சிந்தையாலும்
அருவாயமறையாலுமளவையாலு
மளப்பரிதாயகண்டிதமாய் நின்றமூர்த்தி
உருவாயகிரிவடிவாயனந்தங்கோடி
யொளியுடையகொடுமுடிகளாகிநின்ற
பெருவாழ்வைத்திருமுதுகுன்றுடையான்றன்னைப்
பெருங்கருணையாளனையாம்வணங்கலுற்றாம். 2

பெரியநாயகியம்மை.

பச்சைமலை பவளமலைதனிற்றோற்றம்போலப்
பரிவுடைய திருவடிவுமம்மலைமேலுற்ற
மெச்சுமதித்திருமுகமும் பொச்சதிருவிடையும்
விழிமூன்றுங்கரநான்கும் பெரியநாயகியார்
கச்சிருந்த முலைத்தடமுமமுதவாக்குங்
கருங்குழலும் வெண்ணகையுஞ்செய்யவாயும்
நச்சுமடியார்பிறவி யறுக்குந்தாளும்
நைந்துருகிப்புந்தியினிற்சிந்தைசெய்வாம். 3

விநாயகர்.

ஒருமலையாற்புரமலையு மொருமைந்தன் றிருமைந்தன்
இருமலையுந்தும்மலையு மெதிர்மலையும் வினைமலையும்
பொருமலையும் விம்மலையும் பொம்மலையும்புடைத்தருளிக்
கருமலையும் பெருமலையிற் கைம்மலையைக்கைதொழுவாம். 4

சுப்பிரமணியர்.

திருக்குமரம்போல்வாருந் திருப்பாதங்கண்டாரை
உருக்குமரன்றிருக்குமர னுற்றாரைச்செற்றாரை
முருக்குமரன்சூரனுக்கு முழுவயிரனம்முளத்தைத்
தருக்குமரம்பைக்கனிபோற் றந்தானைச்சிந்தைசெய்வாம். 5

திருஞானசம்பந்தர்.

மருளோடப்புத்தரெலா மருண்டோட வருகரிடத்
தருளோட வாறோட வாற்றெதிரேயேடோட
வெருளோடப் பாண்டியனார் வினையோடச்செய்தடியார்
இருளோடவருளோட மேற்றினான்பதம்போற்றி. 6

திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர்.

மருங்குகடற்கன்மிதப்பில் வந்தார்தம்பதம்போற்றி
பொருங்கரிமேற்கைலையினிற் போனார்தம்பதம்போற்றி
நெருங்குநரிபரியாக்கி நிறுத்தினர்தம்பதம்போற்றி
இரும்பொருள்கேட்டரன்பக்கத்திருந்தார்தம்பதம்போற்றி. 7

வாழ்த்து.

வானவர்கள்யானினங்கண் மறையவர்கண்மறைவேள்வி
யானசிவசமயவே தாகமங்கடழைத்தோங்க
ஞானமுளநரபதியு நற்குடியுந்தழைத்தோங்க
தானதன்மந்தழைத்தோங்க தரணியெலாமழைதூங்க. 8

தெய்விகமா முதுகுன்றர் திருமேனிதனைத்தீண்டுஞ்
சைவமறையோர்குலமுந் தாணிகருந்தழைத்தோங்க
மெய்விரவுஞ்சிவனடியார் மேன்மேலுந்தழைத்தோங்க
பொய்விரவாமுனிவர்களும் புண்ணியருந்தழைத்தோங்க. 9

நூற்பயன்.

தவமேதுஞ்செயவேண்டாந் தருமங்கள்செயவேண்டாம்
புவனேசன் விருத்தகிரிபுராணத்தைப்புலப்பாட்டாற்
கவலாதேகற்றோருங் கேட்டோருங்கதியடைவர்
சிவனாணைசிவனாணை சிவனாணைசத்தியமே. 10

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

புராண வரலாறு.

திருக்கைலாச மலையில் எழுந்தருளியிருக்கும் பரமசிவன் பார்வதி தேவியாருக்குப் பதினெண்புராணங்களையும் உபதேசஞ் செய்தருள, அவற்றைப் பக்கத்திலிருந்து கேட்டருளிய முருகப் பெருமான் வியாசமுனிவருக்குச்சொல்லியருள, அம்முனிவர்சுமந்த முனிவருக்குச் சொல்ல, அவர் தெய்வவன்மருக்குரைப்ப, அவர் சூதமுனிவருக்குச் சொல்ல அச்சூதமுனிவர் நைமிசாரணியமுனி வர்களுக்குச்சொல்வாராயினர்.

அப்பதினெண்புராணங்களாவன, பிரமபுராணம், பதும புரா ணம், வைணவபுராணம், சைவபுராணம், பாகவதபுராணம், பவிடிய புராணம், நாரதீயபுராணம், மார்க்கண்டேயபுராணம், ஆக்கினேய புராணம்,பிரமகைவர்த்தபுராணம், இலிங்கபுராணம், வராகபுராணம் காந்தபுராணம், வாமனபுராணம், மச்சபுராணம், கூர்மபுராணம், காருடபுராணம், பிரமாண்டபுராணம் என்பனவாம்.

இவற்றுள், சைவபுராணம், பவிடியபுராணம், மார்க்கண்டேய புராணம், இலிங்கபுராணம், காந்தபுராணம், வராகபுராணம், வாமன புராணம், மச்சபுராணம், கூர்மபுராணம், பிரமாண்டபுராணம் என் னும் பத்தும் சிவபுராணங்களாம். காருடபுராணம், நாரதீயபுரா ணம், வைணவபுராணம், பாகவதபுராணம் என்னும் நான்கும் விஷ்ணுபுராணங்களாம். பிரமபுராணம், பதுமபுராணம், என்னும் இரண்டும் பிரமபுராணங்களாம். ஆக்கினேயபுராணம் ஒன்றும் அக் கினி புராணமாம். பிரமகைவர்த்த புராணம் ஒன்றும் சூரியபுரா ணமாம். இப்பதினெண் புராணங்களுள்ளும் பத்தாவது புராண மாகிய பிரமகைவர்த்தபுராணத்தில், சிவபெருமான் உமாதேவியா ருக்குத் திருவாய்மலர்ந்தருளிய விருத்தாசல மான்மியத்தை நாத சன்மாவானவர் அனவர்த்திக்குக் கூறியவாறு சூதமுனிவர் சௌன காதிமுனிவர்களுக்குச் சொல்வாராயினர்.

திருச்சிற்றம்பலம்.

முதலாவது

விருத்தகிரிச் சருக்கம்.

திருநுதலில், திலகம் அணிந்து ஒளியுடன் விளங்கும் தேவியே! நீ இவ்விருத்தகிரியின் பெருமையைக் கேட்பாய்:— "அரிபிரமேந்திராதி தேவர்களனைவரும், இவ்விருத்தகிரியின் பெருமையை அறியமாட்டார்கள்; நீ பாலப்பருவத்திலிருந்தமையால் நாம் இது காறும் அதன் பெருமையை உனக்கும் சொல்லவில்லை. ஆதலின் உலகில் எவர்கள்தாம் அறியவல்லவர்கள். நீ எமது திருவுருவிற் பாதிவடிவா யிருத்தலினாலும், இம்மலை உனது குலமாயிருத்தலினாலும் இதன் பெருமையை உனக்குச் சொல்லுதல் தகும்." என்று சிவபெருமான் உமாதேவியாருக்குத் திருவாய்மலர்ந்தருளினர்.

மறையவர்கள் ஓதும் வேதவொலி நிறைந்த இவ்விருத்தகிரியானது, பொன்மலை முதலிய எண்ணிறந்த மலைகளுக்கெல்லாம் புண்ணியம் நிறைந்த சாக்கறையாகும்; இந்திரன் முதலிய தேவர்கள்யாவரும் இறந்தகாலத்திலும் இது ஞானவொளி வீசிக்கொண்டு என்றும் அழிவுறாமல் நின்று விளங்கும்; மும்மூர்த்திகளும், தேவர்களும், முனிவர்களும், யோகிகளும், சித்தர்களும், நிறைந்து வாசஞ்செய்யும் உண்மைத்தலமாகும். நாம் வேறு அம்மலை வேறு என்னும் பேதம் இல்லை. நமக்கு உன்னிடத்திலிருக்கும் விருப்பத்தைக் காட்டிலும் அம்மலையிடத்தில் அதிக விருப்பமாயிருக்கும்.

இன்னும் அம்மலை நாம் இச்சையாற்கொள்ளும் வடிவத்துள் இருதயஸ்தானமாயும், நம்மை ஒத்ததாயும், அநாதியாயும், சிவலிங்க வடிவமாயும், நம்மிருவருக்கும் சந்தோஷத்தைத் தருவதாயும், வேதங்களின் முடிவாயும் விளங்காநிற்கும். திருமுதுகுன்றமானது, தன்னை இடைவிடாமல் தியானிப்பவர்களின் துன்பமனைத்தையும் நீக்கி இன்பமெவற்றையும் எளிதிற்கொடுக்கவல்லது; அளவில்லாத சிகரங்களையுடையது; தன்னிடத்தில் வாசஞ்செய்தவர்களுக்கும் தன்னை அன்புடன் அருச்சனை செய்தவர்களுக்கும் கொடிய தீவினைகளை ஒழித்தருளவல்லது.

மற்றைத் தலங்களிலிருந்து தவத்தைச்செய்த பெரியோர்களைக்காட்டிலும், இவ்விருத்தாசலத்திற் பிறந்த மூடர்களே சிறந்த பெரியோர்களாவர்கள். அசையும்பொருள் அசையாப்பொருள்கள்

ஆகிய இருவகைப்பட்ட உயிர்களெல்லாம் முற்பிறப்பில் அளவில்லாத தவத்தைச்செய்து இறந்தபின் இத்தலத்தில் வந்து பிறக்கும். இத்தலத்தில்வசிக்கின்ற சிறந்த பேதைகளும் உயர்ந்த தேவராம். இவ்விருத்தகிரியின் எல்லையாகிய ஐங்காததூரத்திலும் கூப்பிடுதூரத்திலும் குடியிருப்பவர்களெல்லாரும் தேவர்கள்; கோபுரதரிசனங்கிடைக்கத்தக்க இடங்களில் இருப்பவர்கள், எவர்களினும் மேலானவர்கள்; மலையைச்சூழக் குடியிருப்பவர்கள், மகாவிஷ்ணுவையும் பிரமாவையும் ஒப்பானவர்கள். இம்மலையில் வாசஞ்செய்பவர்களுக்குத் திரிகுணதோஷமும், சர்வபிணிகளும், மிகுந்த பசியும், தீயவினைகளும், நவக்கிரகபீடையும், தரித்திரதிசையும், இராக்ஷத வாதையும் என்றும் இல்லையாம். திருமால் வணங்குகின்ற இத்திருமுதுகுன்றமே ஒரு பெரிய விருக்ஷமாகவும், வேதாகமங்களே மிருகம் பறவைகளாகவும் மனிதர்கண்களுக்குப் புலனாகும். ஆதலின், நமது புகழ் இத்தன்மையதென்பதை எவரும் அறியார்கள். சிதம்பர சிற்சபையில் நிருத்தஞ்செய்வோம், திருமுதுகுன்றினில் இருப்போம் என்று நமது உண்மைவடிவைத் தரிசித்தவன் எவனாயிருந்தாலும், அவன் தேவனேயாவன்; அப்பொழுதே அவனுக்குச் சகல சித்திகளும் சித்தியாகும். இது சத்தியம், சத்தியம் என்று சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினர்.

முற்காலத்தில், நான்கு முகமுடைய பிரமதேவர், நீரையுண்டாக்கித் தமது வீரமாகிய விந்துவை விட்டார். அது நீரில் முட்டையாக மிதந்தது; அதனையுடைத்தலும், அதினின்றும் உண்டாகிய முக்குணங்களில் ஐம்பூதங்களும் தோன்றின. திருமாலின் இருகாதுகளிலுமுள்ள குறும்பியிடத்தில் மது, கைடவர் என்னும் பேரையுடைய இரண்டு ராக்ஷதர்கள் பிறந்து விஷ்ணுவைஎதிர்த்து யுத்தஞ்செய்தனர். அப்பொழுது விஷ்ணு அவர்களை வெல்லமுடியாதவராய் என்செய்வோம்என்று ஏங்கிப் பின் ஒருவாறுதெளிந்து அவர்களைப்பார்த்து 'உங்களுக்கு வேண்டிய வரங்களைக்கேளுங்கள்' என்று சொன்னர். அதனைக்கேட்ட மதுகைடவர்கள் 'எங்களுக்குத் தோற்றுப்போன நீ எவ்வாறு வரங்களைத்தருவாய்' என்று கூறிப் பின்னும் 'உன்னை வென்ற எங்களிடத்தில் வரங்கேள், தருவோம்' என்றனர். மாயவனாகிய மாலும் "என் கையினால் நீவிர் மாயும்படியான வரத்தைக்கொடுங்கள்" என்று கூறலும், அவர்கள் அவ்வாறே கொடுத்தார்கள்.

மாயவன் கையினல் மது கைடவர்கள் மடிந்தொழிந்தார்கள். அவர்களின் மாமிசங்கள் பிரமா சிருஷ்டித்த நீரைத் தூர்த்தன. அந்தநாள்முதல் இந்தப்பூமிக்கு மேதினி என்னும் பெயர் வழங்குவதாயிற்று. அந்தநீரும் இந்தமாமிசங்களும் ஒன்ருய்க்கலந்து இறுகும்படி பிரமா சிவன்திருவடிகளைத் தியானஞ் செய்தனர். அச்சமயம் பரமசிவன் பாதாளங்களுக்குக்கீழே திருவடிகளும், அண்டங்களுக்கு அப்பால் கொடுமுடிகளுமாகி எங்கும் வியாபித்து விருத்தகிரியின் உருவமாய்நின்றனர். அம்மலை தரித்திரன் வாசலில் பொன்மழை பொழிவதுபோலவும், சிறியஊற்றினிற் பெரியநீர்ப்பிரவாகம் தோன்றுவதுபோலவும் நான்முகன் எண்ணமுங்கடந்து பூமிசுவர்க்கங்களில் பரந்துநின்று மதுகைடவரின் மாமிசங்களோடு கலந்து ஒன்ருகிப்பூமிக்குப் பலஞ் செய்து நின்றது.

இதனைப்பிரமதேவர் அறிந்து, "சிவன் செயலால் இதுநிகழ்ந்தது" என்பதை மறந்து, பற்பலமலைகளைப்படைத்து எவ்விடங்களிலும் பாவியிருக்கும்படி ஏவினர். அம்மலைகள் எங்கும்சென்று பார்க்க மலைக்கரசாகிய பழமலையாகவே இருப்பதனல் தாங்கள் இருப்பதற்கு வேறிடமில்லை யென்று அறிந்து பிரமாவிடத்தில் திரும்பிவந்து சொல்லுதலும், பிரமா மிகுந்த கோபத்தோடு அகங்காரங்கொண்டு நின்றனர். (ஒருவனிடத்தில் சினமும் செருக்கும் ஒருங்கே பொருந்துமாயின், அது நெருப்பும் காற்றும் ஒருங்கே பொருந்துவதுபோலாகும். எனெனின், நெருப்பு, தன்வீட்டையும் எரித்துப் பக்கங்களில் உள்ள வீடுகளையும் எரிக்குமாறுபோலக் கோபாக்கினியானது தன்உயிரையும் அழித்துத் தன்குலத்தையுங் கெடுத்துத் தன்னைச்சேர்ந்தவர்களையும் துன்பப்படுத்தும்.)

இவ்வாறு கோபங்கொண்ட பிரமதேவர், ஆயிரந்தேவ வருஷம்வரை அலைந்துதேடியும், அடிமுடியொன்றையும் அறியமுடியாதவராய், இதுஎன்னமாயமோ யார்செய்தவித்தையோ என்று ஐயுற்றுப் பின்னர், சிவபெருமானது திருவருட்செயல் என்றுகருதி, வேதாகம புராணங்களாயும், மந்திரங்களாயும், எங்கும்நிறைந்த பொருளாயும் விளங்குகின்றதிருவைந்தெழுத்தின் பெருமையைஉள்ளவாறுணர்ந்து ஈற்றிலுள்ள மூன்று அக்ஷரங்களும் முதலில்வரும்படி செபித்துத்தியானஞ்செய்தனர். கோடிசூரியர்கள் ஓரிடத்திற் கூடியுதித்தாற்போலப் பரமசிவன் பார்வதிதேவியோடும் இடபாரூட

ராய் எழுந்தருளிவருதலைத் தரிசித்த பிரமா உடல்நடுங்கப் பூமியில் விழுந்து பணிந்தெழுந்து தோத்திரஞ்செய்வாராயினர்.

பாயநால்வகைப்பாலுளபசுக்களைப்படைத்து
மேயபாசமோரைந்தினல்விழைவுறத்தளைத்துத்
தூயபூமியின்சுவர்க்கமுநரகமுமெய்த்துச்
சாயங்காலையிற்கட்டியபசுபதிசரணம்.

பிரமா இவ்வாறு துதித்து, எட்டுக்கரங்களாலும் நான்கு வாய்களையும் பொத்திநின்று, "எம்பெருமானே! தேவரீரது திருவருளால் உண்டாகிய விருத்தகிரியின் உருவமே எங்குநிறைந்து நிற்றலால், அடியேன் ஆக்கிய மலைகளனைத்தும் இருப்பிடமின்றி நின்று ஏங்குவனவாயின. நான் யாதுசெய்வேன்" என்று விண்ணப்பஞ் செய்தலும், சிவபெருமான் சினந்து "எங்கும் நிறைந்துநின்ற உருவம் மலை அன்று; எமது உருவமேயாகும்; முன்னர் நீ ஆக்கிய நீர் இறுதும்படி நாம்செய்தநன்றியைமறந்து செருக்குற்றாய். நாம் ஒரு கணப்பொழுதினில் கோடி பிரமர்களைப்படைத்து மறு கணத்தில் மாற்றுவோம்; இப்படிச்செய்வது பிரமர்களாகிய உங்களைமாத்திரமன்று; திருமால்முதல் எவரையும் எவ்வுலகங்களையும் சிருஷ்டி செய்வோம்; அடுத்த கணப்பொழுதில் அவற்றையும் மாற்றுவோம். இப்படி இறந்தவர்கள் எண்ணில்லாதவர்கள். நீ எம்மை இகழ்ந்தால் நாம் உன்னை அழித்துவிடுவோம். சிவத்தைத்தவிர வேறு தெய்வம் இல்லையென்று சிந்தனைசெய்வாயானல் உன் உலகையாள்வாய்; அல்லது அழிந்துபோவாய்." என்று அருளினர்.

பிரமதேவர் யாளியின் எதிர்ப்பட்ட யானைபோற் கலங்கி, சுவாமீ, பொய்யினேன் செய்த குற்றங்களைப் பொறுத்தருளவேண்டும் என்று பிரார்த்திக்க, சிவபெருமான் அஞ்சற்க என்று அபயம் அளித்து, "பிரமனே நீ இவ்விருத்தகிரியே எமது உருவம் என்று உறுதியாக அறிந்திருக்கின்றாய்; மேலும் சிறியவனாகவுமிருக்கின்றாய்; மாலோன்மகனுமாகின்றாய்; சிருஷ்டித்தொழிலையும்பெற்றாய். ஆதலால், உன் பிழைகளைப்பொறுத்தருளினோம். இனி நாம்கூறும் உண்மையுரைகளை உறுதியுடன் கேட்பாய்; எக்காலத்திலும் அழிவில்லாத இம்மலையின் சிகரங்களில் பஞ்சலிங்கங்களும் ஒருகாலத்திலும் மாறாமலிருக்கும்; அவ்விலிங்கங்களில் இவ்விருத்தகிரியே பிரதமலிங்கமாக, நாவலந்தீவிற் பிரகாசிக்கும்; மற்றை நான்கு

லிங்கங்களும் இத்தீவின் நாற்றிசைகளிலு முள்ள நான்கு தீவுகளி லும் பிரகாசிக்கும். இவ்விருத்தகிரி மறைந்து உனதுகண்களுக்கு அருவமாயிருக்கும், உன்னாற் படைக்கப்பட்ட மலைகளுக்கு இடம் உண்டாகும். முன்னர் நீ நம்மையும் நமது படைப்புத்தொழிலையும் மறந்துசெருக்குற்றுப்படைத்துக குற்றஞ்செய்தனை, ஆதலால் உன் மலைகளுக்கு இடமில்லாமற் செய்தோம். எல்லாம் சிவன் செயல் என்று தெரிவாய்; இந்திரன் முதலிய இறைவர்களும், நீயும், திரு மாலும், சூரியசந்திரர்களாகிய இருசுடரும், எவ்வுயிரும், ஐம்பூதங்க ளுமாகிய எல்லாப்பொருள்களும் நமதுஏவலின்படி நடக்கும் என்று அறிந்துகொள்; நீ படைத்த பலமலைகளைப்பூமிக்கு உறுதியாக நிறு த்திக் கடல்,காடு,நாடு,அட்டகஜம்,அட்டநாகம்,சப்ததீவு,தேவருலகு இவைகளைப் படைக்கும்படி எமது தியானமே எளிதிற்செய்ய வல்லது. ஆதலால் நீ விரும்பிய வரங்களைக்கேள் தருவோம்;'' என்று அருளிச்செய்தனர்.

பிரமதேவர் ''அடியேனை அடிமை கொண்டருளிய கடவுளே! பெரியநாயகியம்மையாரும் தேவரீரும் இத்திருமுதுகுன்றில் என் றும் இவ்வுருவமாய்நின்று அடியார்க்கெளியவராயெழுந்தருளிவந்து அருளுகின்ற புகழும், இப்புராணமும்பொலிவுற்று நிலவுமாறு அநுக் கிரகஞ் செல்தல்வேண்டும்'' என்று விண்ணப்பஞ் செய்தார். ''பிரமனே! நீ கேட்டவரங்களைத் தந்தருளினோம்; நமது திருமுது குன்றைப்பணிந்த பக்தர்களனைவருக்கும் பொருள், புகழ், கல்வி, யோகம், ஞானம், போகம், மோக்ஷங்கள் ஆகிய வரங்களைக்கொடுத் தருளுவோம்; தேவர் பதவியும், திக்குப்பாலகர் பதவியும், அரசர் பதவியும் அளிப்போம்; ஆதியான்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய் விகம் ஆகிய மூவகைத்துன்பங்களையும் நீக்கியருள்வோம்; இவ்விரு த்தாசலத்தை அடைந்தவர்களுக்கு எல்லா இன்பங்களும் உண் டாகும்; இல்லாதது ஒன்றுமில்லை.'' என்று சிவபெருமான் திரு வாய்மலர்ந்து மறைந்தருளினர். அயனார், அப்பெருமான் சென்ற திக்குநோக்கி வணங்கித் தனதுலகிற் சென்று, அனைவருக்கும் இதன்பெருமையை உரைத்து, அப்பரமன் அருளிய வரத்தினாற் சிருஷ்டித்தொழிலையுஞ் செய்யத்தொடங்கினர்.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது
தலச் சருக்கம்.

முக்கண் மூர்த்தியாகிய முழுமுதற்கடவுள் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவருக்கு அருளிய இந்தச்சரித்திரத்தை அன்புடன் படித்தவர்களும், கேட்டவர்களும், திரிகாலங்களிலும் தியானஞ் செய்தவர்களும் இறந்தார்களாயினும் இறந்தாரல்லர். சிவசொரூபமாவர் என்று நான்மறையுணர்ந்த நாதசன்மாவானவர் அனவர்த்திக்குக்கூறிப்பின்னும் இத்தலத்தின் பெருமையைச் சொல்லுகின்றார்.

ஒருகணம், ஒருநாழிகை, ஒருசாமம், ஒருநாள், ஒருபக்ஷம், ஒருவருஷம், மூன்றுவருஷம் விருத்தாசலத்தில் நீங்காமலிருப்பவர்கள் பிறவிக்கடலுள் அமிழ்ந்தார்கள். இத்தலத்தில் எந்நாளும்இருப்பவர்களும், இதன்பெருமையைக் கேள்வியுற்றுவந்து இறப்பவர்களும், பிறப்பவர்களுமே சிவசாரூப்பியம்பெறுவார்களாயின், பிறத்தல், இருத்தல் இறத்தல், மூன்றும் ஒருவருக்கு வாய்க்குமாயின் அவர்பெருமையை எம்மால் எடுத்துச்சொல்ல முடியுமோ. செய்நன்றி மறந்தவர்களும் ஐம்பெரும் பாவங்களைச் செய்தவர்களும் மணிமுத்தாநதியில் மூழ்கிப் பழமலைநாதரைத்தரிசித்து, திருவிழாவில் திருவீதியில் அப்பெருமான் கொண்டருளும் மகோற்சவத் திருக்கோலத்தைக் கண்டு வணங்கி விபூதி பரப்பிய படுக்கையிற் படுத்துறங்குவது முதலிய நியமந்தவறாமல் மூன்றுவருஷம் வரை இத்தலத்தில் இருப்பார்களேயாயின் சிவசொரூபமாவர்.

எழுவகைப் பிறப்புக்களுமுடைய எல்லா வுயிர்களுமிறந்தால் திருமுதுகுன்றநாதர் அவைகளைத்தமது மடிமீதிருத்தி, தாயைப் போல அன்பு செய்து வலச்செவியில் உபதேசஞ் செய்தருளுவார். விருத்தநாயகியும் தமது திருக்கரங்களாற் றடவி முன்றானையால் வீசிப்பிறவிக்களையை மாற்றுவார். இத்தலம் இத்தகைய பெருமை வாய்ந்தது என்று துணிந்து அத்தலத்திற் போய் உயிரை வலிய விட்டவர்கள் புண்ணியராக மாட்டார்கள்; வயிரவக் கடவுளுடைய சூலத்தாற்குத்துண்டு கிடப்பார்கள். இத்தலத்தில் ஒருவன் நித்தமும் ஆயிரமாயிரம் பிழைகளை அறியாமற்செய்தாலும் பழமலைநாதர் அவற்றைப்பொறுத்தருளுவார்; ஆனால்அறிந்து ஓரணுவளவு அரிய குற்றங்களைச் செய்தாலும் அது மேருவாக வளரும். பிராமணர்

களும் பெரிய முனிவர்களும் சிறிய பாவஞ்செய்யினும் மூடராய் வயிரவர் சூலத்தாற் குத்துண்டு வருந்துவார்கள். வெப்பிற்காலத்தில் வனங்களிற் சஞ்சரிப்போர்களுடைய சோகதாகம் குளிர்ந்த நீராலன்றி மற்றொன்றினாலும் மாறாதவாறுபோல வேறுதலத்திலிருந்து செய்த பெரும்பாவங்களெல்லாம் விருத்தாசலத்தில் நீங்குமேயல்லாமல் வேறொருதலத்தில்நீங்காது. இத்தலத்திலிருந்து செய்த பாதகமனைத்தும் வயிரவர் சூலத்தினாலல்லாமல் மற்றொன்றினாலும் நீங்கமாட்டாது. விருத்தாசலத்தில் சற்குருவினால் சிவமூலமந்திரமாகிய திருவைந்தெழுத்தை உபதேசம்பெற்றுத் தினமும் ஐயாயிரத்தைந்நூறுதரம் செபித்தாலும் அக்ஷாலக்ஷம்செபித்தாலும் பாவங்கள் நீங்கிச் சிவசொரூபமாவார்கள்; அவர்கள்மனைவிமாருஞ்சத்தியினுருவைப்பொருந்துவார்கள். இவர்கள்எக்காலமும் இந்தவடிவைப்பெற்றிருப்பார்கள். குருவுபதேசம்பெற்று வேதாத்தியயனம்செய்தாலும் அப்பலன்களையடைவார்கள். பாவங்களைநாசஞ்செய்யும் பழமலையிலிருந்து பழமலைநாதரை வணங்கித்தவஞ்செய்பவர்களை முனிவருந்தேவரும் முன்வந்துவணங்கிப்பணிந்துநிற்பர். பெரியநாயகியம்மையும் தாய்தங்கை, தமக்கை, அத்தை, மைத்துனி முதலிய உற்றசுற்றத்தார் போலவந்து சூழ்ந்திருப்பார். இத்தலத்தைவிட்டுக் காசிக்குச் சென்றவனுக்குத் தவத்தின் பலமும் முத்தியும் சித்தியாகா. கூன் குருடு செவிடு ஊமையாகிய பலபிணிகளையுடையவர்கள் உறுப்புக்குறைந்தவர்களாயிருந்து மணிமுத்தாநதியில் மூழ்கிப் பெரியநாயகியையும் பழமலைநாதரையும் வழிபட்டுநின்று அழகிய சரீரத்தைப் பெற்றவர் அளவில்லாதவர்கள்; மணலையும் நக்ஷத்திரங்களையும் மழைத்துளிகளையும் இவ்வளவென்று அளவிட்டுச்சொல்லவல்லவன் விருத்தாசலத்தில் வரம்பெற்றவர்களை வரையறுத்துச்சொல்லவல்லவனாவான்.

அத்திரி, வசிஸ்டர், போதாயனர், ஜமதக்கினி, அகத்தியர் காசிபர், சதக்கினர், உரோமசர், கண்ணுவர் முதலியமுனிபுங்கவர்களும் இத்தலத்திலிருந்து அருந்தவஞ்செய்து அவரவர்கள் விரும்பிய பலவரங்களைப்பெற்றார்கள். மும்மூர்த்திகள், திக்குப்பாலகர், அட்டவசுக்கள் ஆகிய இவர்களும் இலக்குமி, சரஸ்வதி, இந்திராணி இவர்களும் இத்தலத்திருந்து மெய்த்தவஞ்செய்து தங்கள் தங்கள் நற்பதங்களைப்பெற்றார்கள். தானம், தருமம், தவம், யாகம், தத்துவமாகிய இவைகளொன்றுந் தெரியாதவர்களாய் முத்தியடைய விரும்பின

வர்கள் எல்லாப்பாவங்களையும் நீக்கவல்ல இத்தலத்தில் வாசஞ்செய்வார்களானால் முத்தியை அடைவார்கள். ஞானிகள் சிறிதுகாலம் வசித்திருந்தாலும், அவர்கள் எண்ணிய பதவிகளை யடைதல் திண்ணம். அதுவல்லாமலும் அவர்கள் தேவவிமானங்களில் ஏறிச்சென்று தேவருலகமுழுதும் உலாவிவருவார்கள்.

விருத்தாசலம் என்று ஒருதரம் துதித்தவர்களும், மதில் கோபுரம் முதலிய திருப்பணி செய்தவர்களும், செய்வித்தவர்களும் இத்தலத்தின் திருநாமங்களைக் கேட்டவர்களும் படித்தவர்களும் ஆகிய இவர்களைச்சூழ்ந்த தீயபாவங்கள் சூரியனைக்கண்ட இருள் நீங்குவதுபோல விலகிப்போம். இத்தலத்திருந்து தேவவிமானங்களில் ஏறிச் சிவலோகஞ்செல்பவர்களை ஆதித்தர் பன்னிருவரும், அட்டதிக்குப்பாலகரும், தேவரும் எதிர்கொண்டு வணங்கி, சிவபெருமானுக்கு அருச்சிப்பதுபோல அருச்சித்து உபசரிப்பார்கள். மும்மூர்த்திகளிலும் முதுகுன்றநாதருக்கு இணையான மூர்த்தி இல்லை; அதுபோல இவ்விருத்தகிரிக்கு இணையானதலம் இன்றும் இல்லை; என்றும் இல்லை. இத்தலவிருக்ஷமாகிய வன்னிமரத்தின் ஓரிலையில் அடங்கிய உணவை எவர்களுக்காவது கொடுத்தவர்கள் சிவலோகத்திற் சேர்ந்திருப்பார்கள். சிவபூசைத் திரவியங்களுள் ஒருபலமாயினும் உதவினவர் சிவசொரூபமெய்துவர். சிவனடியவர்களுக்குத் திருமடங்கட்டிக்கொடுத்தவர்கள அவ்வடியவர்கள் வசிக்கும காலஅளவில் ஒவ்வொரு பொழுதுக்கும் ஒவ்வொரு கற்பகாலம்வரை சிவலோகத்தில் இனிது வாழ்வார்கள். வீதி வகுத்து வேதியர்களுக்கு வீடுங்கொடுத்துப் பூமிதானஞ்செய்தவர்கள் முற்கூறிய பலங்களைப் பெறுவார்கள். இனித் திருமணிமுத்தாநதியின் சிறப்பைச் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது

தீர்த்தச் சருக்கம்.

முன்னொருகாலத்தில், திருமுதுகுன்றநாதருடைய சந்நிதிக்குக் கீழ்த்திசையில், பிரமாவிஷ்ணுமுதலியதேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், யோகிகள் ஆகிய அனைவரும் குழுமியிருந்து, அரிய

பெருந்தவஞ்செய்து, மூலாதார முதலிய ஆறாதாரங்களின் வழியாய்ச் சிவபெருமானது உண்மையுருவத்தைத் தியானித்தலும் பிரமானந்தப்பெருக்கு உண்டாயிற்று. பரமசிவன் அந்தப்பேரானந்தப் பெருங்கடலைத்தமது திருக்கரங்களால் நதிவடிவமாக்கிமணிமுத்தாநதியென்னுந் திருநாமஞ்சூட்டியருள, அந்நதி சிவசத்தி வடிவாய்ச் சிவனுக்கின்பஞ்செய்து யாவருக்கும் நீராய்விளங்கித்தீவினைகளுக்கு நெருப்பாயும் நம்மவர்களுக்குக் குளிராயும் இருந்தது. அம்மணிமுத்தாநதியினின்றும்படிந்துவருங்காற்று மேல்பட்டமாத்திரத்தில், பறவை, மிருகம் முதலிய எழுவகைப் பிறப்பினையுடைய எண்ணில்லாத உயிர்களும் தேவருலகையாளும்; அந்நதியில் மூழ்கினவர்களுக்கு அன்பு, அறிவு, தவம், ஈசுரபக்திகள் உண்டாகும்; சிவனருளும் சிவஞானச்செல்வமும் பெருகும்; சகல துன்பங்களும் சாராதோடும்; அஞ்ஞானம், சோம்பல், தரித்திரம் அகன்றுவிடும்; திருமகளும் நேசமோடுவாசஞ்செய்வாள்; அட்டமாசித்தியும் முத்தியும் சித்தியாகும்; மயக்கம், பேய் ,நோய்கள் மாய்ந்துபோகும்.

அம்மணிமுத்தாநதியில் ஒருதரம் ஸ்நானஞ்செய்தால் ஆயிரங் கோதானஞ்செய்த பலனுண்டாகும். அவர் மூழ்தும்போது தமக்கு இஷ்டரை யெண்ணி மூழ்கினால் நினைக்கப்பட்டவர்களும் பரமுத்தியெய்துவர்; மனமகிழ்ந்து மூழ்கி ஓரிரவு தங்கினால் சிவலோகஞ் சேர்வர்; பலதரமும் ஸ்நானஞ் செய்தவர்கள் பெறும்பேறுகளுக்கு ஓர் எல்லையுண்டாகுமோ? அந்நதியினைத்தெரிசித்தாலும் பரிசித்தாலும், மூழ்கும்படி முயற்சித்தாலும், அன்புடன் அந்நதிக்கரையில் வசித்தாலும், ஸ்நானஞ்செய்தாலும் அவர்கள் பாவமுழுதும் சூரியனைக்கண்ட இருள் நீங்குவதுபோலக் குறைந்துவிடும். இவ்வளவு விசேஷ பலன்களைத்தருவதென்று எண்ணி ஸ்நானஞ்செய்து சிவ பூசை செய்பவர் பெருமையைச் சொல்லவல்லவர் எவருளர். அமாவாசை, பௌர்ணிமை, உத்தராயணம் தக்ஷிணாயனம் மாசப்பிறப்பு, விசேஷநக்ஷத்திரங்கள், விதிபாதயோகம், வைகாசிப்பௌர்ணிமை, மாசிமகம் இந்த நாள்களில் மணிமுத்தாநதியில் முயற்சியுடன் மூழ்கி, இயன்றவரை தானஞ்செய்து சிவபெருமான் திருவடிகளை வணங்கி மும்முறை வலம்வந்து விதிப்படி பூசிப்பவரது பலன்களை நூறுவருஷம்வரை சொன்னாலும் முடிவுபெறாது. அவர்கள் வசிக்குந்தலமே சிவலோகமாகும்.

கங்கை, யமுனை, பிரயாகை, சரஸ்வதி, காவிரி, சந்திரபாகை, கோதாவரி, நருமதை, சரயு, கோமதி, கண்டகி, மந்தாகினி, அஞ்சனை, மந்தகை, சோணை, சிந்து, சங்கம், கயை, கவுசிகை, கன்னியாகுமரி என்னும் புண்ணிய தீர்த்தங்களிலும், பூமி, சுவர்க்கம், பாதலமாகிய மூவுலகிலுமுள்ள மற்றைத் தீர்த்தங்களிலும், நதியும் கடலும் சங்கமமாகுந்தீர்த்தங்களிலும் சென்றுமூழ்கும்பலன்களைப் பார்க்கிலும், இம்மணிமுத்தாநதியில் ஒருநாள் ஸ்நானஞ்செய்வோர்களுக்குக்கோடி மடங்கு பலன் கூடும். பெருமை பொருந்திய திருமணிமுத்தா நதிக்கரையில் இருந்து யாகஞ் செய்தவர்கள் சதாசிவரூபமாவார்கள். மாசி மக நக்ஷத்திரத்தில் அந்நதியில் ஸ்நானஞ்செய்து சுவாமிக்கு அபிஷேகஞ்செய்வதற்கு அந்தநீரைக்குடத்தில் எடுத்துக்கொண்டு நடந்தவர்களுக்கு அடியொன்றுக்கு ஓர் அஸ்வமேத யாகஞ்செய்த பலன் வீதமுண்டாகும். மற்றைத்தலங்களிலிருந்து இதனைத்துதித்தாலும் நினைத்தாலும் பிறவிநீங்கும். அகத்தியமுனிவர் அருள்பெற்று விளங்கிய சுவேதமுனிவர், பௌர்ணிமை, மாசிமகம், ஆதிவாரம், அஷ்டமிதிதி, ஆதிரைநாள் ஆகிய தினங்களில் இந்நதியில் அன்புடன் ஸ்நானஞ்செய்து பின்பு சிவபெருமானுக்குஅபிஷேகஞ்செய்த திருமஞ்சனநீரானது இவ்வுலகில் சுவேதநதியென்றும் வெள்ளாறென்றும் பேர்பெற்று விளங்கும்.

கயரோக நோயினன், சொத்தைப்பல்லினன், குறைந்தகையினன், குட்டநோயினன், முடைநாற்றம்பொருந்திய உடம்பினன், முயலகன் என்னும் வலியினன் இவர்கள் அறுவரும் விருத்தாசலத்துக்குப்போய் அகத்தியமுனிவர் முன்னின்று வணங்கி, "முனிவர் தலைவரே, நாங்களறுவரும் இந்நோயினால் துன்பமடைவதற்கு முன் சன்மத்தில் என்னபாவஞ்செய்தோம்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அகத்தியர் அவர்களை நோக்கி, "நீங்கள் முற்பிறப்பில் மறையவர்களை வதைத்தமையாற் கயரோகமும், குருபத்தினியை மருவியதாற் குட்டநோயும், பிறர்மனைவியரை விரும்பியதால் முடைநாற்றம் வீசும் உடலும், கோட்சொன்னதாற் சொத்தைப் பல்லும், மதுபானஞ்செய்தலாற் குறைவுற்றகைகளும், பொன்னைத் திருடியதால் முயலகன் என்னும் வலியும் உங்களுக்கு வந்தன. இதனால் நெடுங்காலம் நரகக்குழியில் வீழ்ந்து வருந்தினீர்கள்; இப்போது அப்பாவங்களில் எஞ்சியவற்றை அநுபவிக்க இப்பிறவியெடுத்தீர்கள். மாசிமாதமுப்பதுநாளும் மணிமுத்தாநதியில்முழுகிப்

பழமலைநாதரை வணங்கிவருவீர்களாயின், உங்கள் கொடிய நோய்கள் முழுதும் கடிதில் நீங்குதல் நிச்சயம்." என்று அருளிச் செய்தார். அவ்வறுவரும் அகத்தியமுனிவர் ஆஞ்ஞையின்படி மணிமுத்தாநதியில் மாசிமாசமுழுவதும் முறைப்படி மூழ்கிப்பாவவிமோசனராகிய பழமலைநாதர் திருவடிகளை வணங்கித்துதித்துப்பின் அகத்திய முனிவரையடைந்து அடிபணிந்து நின்றார்கள். மேகத்தில் மறைந்து நீங்கிய இளஞ்சூரியனைப்போல ஒளியுடன்விளங்கும் உடலினராகிய அவ்வறுவரையும் அகத்தியமுனிவர் கண்டு நீங்கள் முற்பிறப்பிற் செய்த பாவங்களால் நேர்ந்த நோய்களும், மணிமுத்தநதியில்மூழ்கியதால் அந்நோய் நீக்கமும், பழமலைநாதர் உங்களுக்கு அருள்செய்ததுமாகிய அற்புதச்செயல்களனைத்தும் உலகில் எவரும் அறிந்துய்யும்படி எடுத்துச்சொல்லுங்கள் என்றுகூறினர். அந்த ஆறுபேரும் அம்முனிவர் அநுமதிப்படி தேசமெங்குந்திரிந்து அறிவித்துச்சென்றார்கள்.

செல்வங்களாற் சிறப்புற்ற சிலோச்சயமென்னுந் தேசத்தில் வணிககுலதிலகனாகிய் விளங்கிய சுகேசனென்பவனுக்குச் சற்புத்திரர் அறுவர் இருந்தார்கள். அவர்கள் கல்விகேள்விகளில் நல்லபாண்டித்தியராய், சொல்லினுமிலாபங்கொள்ளும் தூயநல் வர்த்தகத் தொழிலில்விர்த்திபெற்று, நீதிவழுவாதுபொருள்தேடி, குபேரனைப்போல் பொலிவுற்று வாழ்ந்துவருநாளில் விருத்தகிரியின் பெருமையைக் கேள்விபுற்று அத்தலத்திற்சென்று மணிமுத்தாநதியில்மூழ்கி நீறணிந்து நித்தியநியமங்களைமுடித்து, இரத்தினம், பொன், பூமி வஸ்திரம், பசு முதலிய தானங்கள்செய்து பழமலைநாதரைத் தெரிசித்து வணங்கி நதிக்கரையில் ஒருவிருக்ஷத்தின் நிழலில் இருந்தார்கள். அப்பொழுது நெடுந்தூரத்திலிருந்து ஒரு பிறவிக்குருடன் முன்னே ஒருவன் கோல்பிடித்து வழிகாட்டிவர வந்தான். அவன் திருக்கோயிலுக்கு வடதிசையிலுள்ள புண்ணியமடுவில் இதுசெய்யின் இதுவிளையும் என்று எண்ணாமல் மூழ்கியதும் தனது இரு கண்களுந்தெரிந்து நன்றாகப் பிரகாசித்தலினால் நகைத்துநின்று ஆனந்தக்கூத்தாடி எட்டுத்திக்கினையும் நோக்கினான். பார்த்த புண்ணியபுருஷனை வணிகராறுவரும் விரித்த கைகளையுடையவராய், என்ன அதிசயம் நடந்தது என்று வினவினார்கள். கண்பெற்றவன் நான் இந்தமடுவில் தாகத்தினால் மூழ்கியதும் பெரிய உருவத்தையுடைய ஒரு மகாபுருஷர்வந்து ஏதோ சொன்னார். அதை அறியா

தவனாப் ஆகா என்று அலறினபொழுது அப்பெரியவர் என்னைப் பிடித்து எனதிருகண்ணிலும்பொருத்தமான ஒரு மருந்தைத்தடவலும் என் குருட்டுத்தன்மை நீங்கிக் கண்கள்தெரிந்து மனமும் தெளிந்தபடியால் அப்பெரியாரின் அழகைப்பார்த்தேன். என்ன சொல்வேன். புசித்தீற் பசிதீரும் என்று சொல்வது உலகவழக்கம். அவர் அழகைப்பார்த்தால் பசிதீரும்; அவர் கமல முகமும், கண்மூன்றும், பொன்சடையும், வெண்மதியும், கருமிடறும், மங்கையோர் பாகமும், மானும், மழுவுமாய் விளங்கும்படி தோன்றி நின்றருளினர். சுவாமீ, நீங்களிருவரும் அடியேன்மீது கிருபைவைத்து இருகண்களையும் கொடுத்தருளினீர்கள். நீங்கள் எப்பொழுதும் வாழுங்கள் என்று யான் கூறினேன். அதற்கு அவர்கள் உனக்குமாத்திரமன்று; இந்நதி தன்னிடத்தில் அன்புடன் மூழ்கினவர்களுக்கு மும்மலங்களையும் போக்கிப் பொன்னையும், பூமியையும் அளிக்கும்; தேவர் பதங்களையும் கொடுக்கும். ஆதலால் அந்த மாத்தின் நிழலில் இருக்கின்ற வணிகமக்களுக்குச் சொல்லிப்போவாய் என்று அருளினார். நீங்களும் சென்று மூழ்குங்கள் என்று கூறினான். வைசியப்பெருமக்கள் அனைவரும் கண்ணைப்பெற்ற புண்ணியபுருஷன் சொற்படி புண்ணியமடுவில் விருப்புடன் மூழ்கி எழுந்தபொழுது சுவாமியும் அம்மையாரும் விருத்த உருவத்தினராய், எழுந்தருளிவந்து, அவர்கள் விரும்பிய வரங்களைத்தந்தருளினார்கள். அவ்வறுவர்களும் அவர் திருவுருவங்களைக்கண்டு வணங்கி கைகுவித்து நின்று துதித்து ஆனந்தக்கூத்தாடி, பழமலைநாதர் சந்நிதி சென்று தரிசித்து வணங்கி மனமகிழ்வுடன் விடைபெற்றுக்கொண்டு தங்கள் நகரத்துக்குப் போனார்கள். ஆதலின் தீர்த்தத்தின்பெருமை இப்பொழுதுமாத்திரமா இருக்கும்; எப்பொழுதும் இருக்கும்.

அத்தலத்தில் வன்னி விருக்ஷத்தின் மேற்றிசையில் நித்தியானந்தகூபம் என்று ஒரு தீர்த்தம் விளங்கும். அதனைப் பிரமதேவர் அன்பினாலுண்டாக்கி அத்தீர்த்தங்கொண்டு பழமலைநாதரைப் பல நெடுங்காலம் பூசித்துப் பலசித்திகளையும் உலக சிருஷ்டியையும் பெற்று மகிழ்ந்தார். அத்தீர்த்தத்தில் சிறிது உட்கொள்ளப்பெற்றவர்கள் முத்திபெறுவார்கள். அப்பிரமதேவர் இத்தீர்த்தத்தை உண்டாக்குவதற்குமுன் தமது நித்தியகருமம் முடித்தற்கு அக்கினி திசையில் அரியதீர்த்தம் ஒன்றுண்டாக்கி நியமநிஷ்டைகள் செய்

தார், அத்தீர்த்தம் பாவமென்னும்செத்தையை எரிக்கும்; அக்கினி போலப்பிரகாசிக்கும். அதில்அன்புடன்மூழ்கினவர்வினைகளினின்று நீங்கி நற்கதிபெறுவர். திருமாலும் சிதம்பர சிற்சபையில் ஆடும் அற்புத நடனத்தைத் தரிசித்துக்கொண்டுஇத்தலத்தில்வந்துநிருதி திசையில் ஒரு தீர்த்தமுண்டாக்கி அதில்இலக்குமியும்தானும் ஸ்நானஞ்செய்து பழமலைநாதரை வழிபட்டு அப்பெருமானருளால் உலகத்தைக் காத்தலாகிய தொழிலைச்செய்துகொண்டுவந்தார். அத்தீர்த்தத்தில் அன்புடன் ஆடுவோர்கள் நினைத்தவெல்லாம் சித்திபெறுவார்கள் என்றுபரமசிவன் பார்வதிதேவிக்குப்பகர்ந்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது

விதர்க்கணச் சருக்கம்.

பார்வதிதேவியார் பரமசிவனைப்பணிந்து சுவாமி, இத்திருமுது குன்றில் வந்திருப்பவரெல்லாரும் தேவவிமானத்திலேறி எங்கும் திரிவர்கள்'' என்று திருவாய்மலர்ந்தருளினீர்; அப்படி விமானங்களிற் சென்றவர் யார் யார்? அவர்கள் எத்தேசத்தவர்கள்? அவர்கள் பாவந்தீரச்செய்த தவம் யாது? அவைகளைத் தெரிவித்தருளவேண்டும்'' என்று விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமான் திருவாய்மலர்ந்தருள்வாராயினர்.

முற்காலத்தில் கோசலதேசத்தில் மணிபிங்கலை யென்னும் நகரில் விபசித்து என்னும் வேதியனொருவன் மிகுந்த வறுமைப் பிணியால் வந்தபசியை மாற்றுவாரொருவரும் இல்லாமையினல் நாட்டிற் பலவிடங்களிலுந் திரிந்து நன்மையொன்றும் அடையமுடியாதவனும் காட்டிற் சென்றும் காய், கனி, கிழங்கு ஒன்றுங் காணுதவனும் மனம்வருந்தி, வனங்களில் ஆறுநாள்வரை அலைந்து திரியும்பொழுது சூரியகிரகண புண்ணியகாலம்வர வழியில் ஒரு சுனையைக்கண்டு மூழ்கி அருகிலிருக்கும் சிவலிங்கத்துக்கு அருச்சனைசெய்து அப்பால் நடக்கையில், சரீரத்தளர்வால் மரம்போற் சாய்ந்துவிழுந்து, எழுந்து நடக்கும் சக்தியற்று, கல்லும் முள்ளும் கால்களிற்றைத்து இரத்தம் ஒழுகவும், அன்னந் தண்ணீருண்ணுமையால் பல்லும் நாவும் பசைபிடித்து ஒட்டிக்கொள்ளவும், நிற்க

நிழலின்றி வருந்தவும், வாடியிருந்து, 'நான் நல்ல குலத்திற் பிறந்திருந்தும், நல்லசாஸ்திரங்களை நன்குகற்றறிந்தும், நல்லோர்பலரால் நன்குமதிக்கப்பெற்றிருந்தும், செல்வம் ஒரு சிறிதும் இல்லாததினுலன்றோ எனக்கு இவ்வாறு இடையூறு நேர்ந்தது; முன்வினையின்படி இல்லதுவாராது உள்ளதுபோகாது" என்று எண்ணுதெண்ணி மனம் புண்ணுயினுன்.

இவ்வாறு விசனமுற்ற விபசித்து, முன்செய்த சிவபூசாபலத்தால் ஏழாவது நாளில் ஒரு சுனைக்கரையில் தேவவிமானம் வருதலும் அதனருகிற் சென்ருன். அத்தேவவிமானத்தில் தேவமாதர்கள் இசையுடன் பாடியாடவும், ஆலவட்டம் அசையவும், வெண்சாமரைவீசவும், பூமழை பொழியவும், வெண் கொற்றக்குடைநிழலில், மாதர்களின் மத்தியில், சிவபெருமான் திருவருளால், சடைமுடியும், வெண்பிறையும், முக்கண்ணும், முப்புரிநூல் விளங்குந்தோளும், கொன்றைமாலையும், நீலகண்டமும், ஒளியுருவும் கமலமுகமும்பெற்றுப் பிரகாசிக்கின்ற கணநாதர் இருக்குஞ் சிறப்பை விபசித்து கண்டு தெரிசித்தான்.

கணநாதர் விபசித்துவைக்கண்டு விமானத்தினின்று இறங்குதலும், வேதியனுகிய விபசித்து வந்து கணநாதரை வணங்கி, "சுவாமீ, அடியேன் உம்மை வணங்குதற்கு முன்னுளில் என்ன தவஞ்செய்தேனே? நீர் உருத்திரரைப்போலுமிருக்கின்றீர், உம்மை இன்னரென்று அறிந்திலேன்" என்றுகூற, சிவகணநாதர் வேதியனை நோக்கி "விபசித்துவே நீ அருந்தவஞ்செய்தாய், ஆதலால் எம்மைத்தரிசித்தாய். சிவகணநாதரைத் தரிசித்தல் யாவருக்கும் எளிதல்ல; பழமலைநாதருடைய கணநாதன் நான்; என் முற்பிறப்பின் கதையக்கேட்பாய்" என்று கூறினுர்.

"நான் பாஞ்சாலநாட்டில் விதையமென்னுநகரில் ஒரு செட்டியின் மகன். என்பேர் விதர்க்கணன். நான் மிகுந்த வறுமையினுல் கூலிக்குச் சுமைதூக்கி வயிறுவளர்த்து வந்தேன். சிலநாட்சென்றதும், ஒரு வர்த்தகனுக்குச் சுமை சுமந்து விருத்தாசலத்துக்குப்போனேன். அப்பொழுது மார்கழித்திருவாதிரைப்புண்ணியத்திருநாள். அத்தலத்தில் ஞானிகள் முதலிய நல்லவர்பலரைத் தரிசித்தேன். வர்த்தகன்சரக்கை விற்று என்கூலியுங்கொடுத்தான் அன்று அளவில்லாதவர்கள்வந்துமணிமுத்தாநதியில்மூழ்கினுர்கள்;

யானும் அதனைக்கண்டு மூழ்கி, விபூதி ருத்திராக்ஷமணிந்து, திருக்கோயிலுக்குச்சென்று வலம்வந்து, பழமலைநாதரைத்தொழுது துதித்துக் கூலியால் வந்த சிறிது பொருளைத்தக்கவர்களுக்குத் தானஞ்செய்து உணவின்றி நித்திரை யொழித்து வாய்பேசாது அன்றிரவு அவ்விடத்திற்றங்கியிருந்தேன். இரவுமுழுவதும் பழமலைநாதரும் பெரியநாயகியம்மையும் எழுந்தருளிவருந் திருவுலாச்சிறப்பை அடியவர்கள் கண்டுவணங்கித்துதித்து விடியற்காலத்தில் மணிமுத்தாநதியில் மூழ்கிக்கடவுளை அருச்சனைசெய்ய, அடியேனும் அவ்வாறு மூழ்கியருச்சித்து வணங்கிப் பிச்சையேற்று உண்டு மகிழ்ந்திருந்தேன். பின் என் ஊருக்கு வந்து சிலநாளாயினபின் மரணாவத்தை அதிகரித்தலும், இயமதூதர்கள் என்னைப்பாசத்தாற் கட்டுதற்கு நெருங்கிவந்தார்கள். அவர்கள்வருமுன் சிவகணங்களும் பழமலைநாதரும்பாலாம்பிகையும் விநாயகரும், சுப்பிரமணியரும் நந்திநாதனும்எழுந்தருளிவரத்தரிசித்தலும்,எனதுசனனமரணத்துன்பங்களை தெளிந்தன. தேவ தேவராகிய சிவபெருமான் உமாதேவியின் திருத்தோள் மேல் தமது திருக்கரம் வைத்துத் திருப்புன் முறுவல் செய்து "விதர்க்கணு! நீ இனி உன்பயங்களை விட்டுவிடு; உன்மீது அன்புவைத்தவர்கள்நாங்களே. உனக்கு யமதண்டனை யாவும்இல்லை என்று அருளிச்செய்து உண்மை ஞானத்தை என் வலச்செவியில் உபதேசஞ்செய்தருளினர். பெரியநாயகியார் தமது முன்றானையால் பிறவிக் களை நீங்கும்படி வீசினர். அப்பொழுதே சிவகணநாதனாகி தேவவிமானம் எதிர்வரச் சிவபெருமான் திருவடிகளைத் துதித்து வணங்கினதும் இறைவன்மறைந்தருளினர். நான்தேவவிமானத்தில் ஏறின நாள்முதல் எந்த உலகங்களிலுஞ் சுற்றிவருகின்றேன். அவ்விமானத்தில் வருகின்றவர்களெல்லோரும்பழமலைநாதரைவணங்கித் துதித்தவர்களும் அத்தலத்தைமிதித்தவர்களுமேயாவர். விருத்தாசலத்தை மிதித்தவர்கள் இந்தப்பெரும் பலனைப்பெற்ருல் உள்ளன்புடன் அத்தலத்திற் சென்று வணங்கினவர்கள் எதைத்தானடையமாட்டார்கள். இத்தலத்தை மிதித்தவர் சூரியனொளி வீசுமிடங்களிலெல்லாம் சிறந்த விமானங்களில் ஏறித்திரிவார்கள். பழமலையில் வந்து வரம்பெற்றவர்களை நான்குவேதங்களும் வரையறுத்துக்கூற முடியா. பழமலைநாதரும் பாலாம்பிகையும் எவர் வருவாரென்று எதிர் நோக்கியவண்ணம் நிற்கின்ருர்கள். ஆதலால் நீயும் அத்தலத்திற் சென்று முறைப்படி மூழ்கிவணங்கினுல் திருமுதுகுன்ற நாதர்

கிருபை புரிந்தருள்வார். இது சத்தியம்" என்று கணநாதர் கூறி மறைந்தார். இனி அதனைக் கேட்டுக்கொண்டிருந்த விபசித்து வினுடைய சரித்திரத்தை விபரமாய்ச் சொல்லுகிறோம்.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது

விபசித்துச் சருக்கம்.

விபசித்துவானவர் கணநாதர் சென்றதிசைநோக்கி வணங்கித் துதித்து மெய்மறந்து பொய்யகற்றி, சிவத்தியானத்தால் யான் பெற்றசெல்வமேசெல்வம் என்றுகருதி மனமுருகி ஞானத்தாற் பல விதமாகத்தியானித்தார். தாய், தமர், (சுற்றம்) தாரம், (மனைவி) இழந்து பசியினாற்பேய்போலலைந்துதவஞ்செய்யாது அவமேசெய்து பித்தனுய்த்திரியும் எனக்குச் சிவபெருமான் வெளிப்பட்டு அருள் செய்வது ஜாலவித்தையோ உண்மையோ மாயமோ கனவோ யாதொன்றும் அறிகிலேன். மாதர்மனம், செல்வம், மழை, இவை இன்னதன்மையது' இன்னகாலத்தில் வருவது என்று அறிய முடியாதவாறுபோல முன்செய்த அருந்தவத்தாற் பெரும்பலன் வருங்காலம் இன்னதென்று அறிதல் அருமை என்று அறிவுடையோர் கூறுவர். அத்தன்மைபோலக் கணநாதர்தரிசனம் எனக்குக் கிடைத்ததோ" என்று இவ்வாறு எண்ணிய விபசித்து அங்குள்ள தெய்வச்சுனையில் மூழ்கி நித்திய நியமங்கள் முடித்து மனந்தளர் வுற்றிருந்தார்.

அப்பொழுது அந்தச்சுனையில்ஸ்நானஞ்செய்வதற்குச்சிலதேவ மாதர்கள் விமானத்தில்வந்திறங்கினர்கள்' அவர்கள்ஆபரணங்களைக் கழற்றிக்கரையில்வைத்து ஸ்நானஞ்செய்துகரையேறி வேறுஆடை ஆபரணங்களை யணிந்து கொண்டார்கள். அப்பொழுது அரனது தோழனுகிய குபேரன் தங்கையானவள் தன்ஆபரணங்களையணியுங் கால், தமயனுக்குத் தேவர்களாற் கொடுக்கப்பட்ட விலையில்லா மாணிக்கம்பதித்த உயர்ந்த மூக்கணியொன்று காணுமையால் ஏக்க முற்றிருந்தனள். மற்ற மாதர்கள் அதனைக்கண்டு மனத்துயரங் கொண்டார்கள். ஒரு சிச்சிலி என்னும் குருவி வந்து அந்த ஆபா

ணத்தைக் கவ்வி மாத்தின்மேல் வைத்து உண்ணுமுணவு என்றெண்ணி அதனைக் கொத்துதலும் அது தவறி மாத்தடியிலிருந்த விபசித்துவின் மடியில்விழுந்தது. அம்முனிவர் அதனைக்கண்டஞ்சி நடுக்கத்துடன் கையிலெடுத்து வைத்துக் கொண்டிருந்தார். தெய்வப்பெண்கள் இதனை அறியாதவர்களாய், குபேரன் தங்கையை நோக்கி, சில சபத மொழிகளைக் கூறினர்கள். மின்னுகின்ற உன்னுடைய மூக்கணியை நாங்கள் எடுத்திருந்தால் விரதமில்லாதவன், ஒழுக்கமில்லாதவன், பொற்களவுசெய்தவன், வேதங்களைவிட்டவன் சிவஸ்தலத்தில் அதி பாதகஞ்செய்தவன், சிவபூஜை செய்யாது உண்பவன், குருநிந்தை செய்பவன் ஆகிய இப்பாவிகள் அநுபவிக்கும் நரகத்தில் நாங்களும் அநுபவிப்போம். இன்னும் புருஷன் பசியறிந்து போசனமிடாதவள். புருஷனைவஞ்சித்தவள். புருஷனுக்கு முன் உண்பவள், புருஷனை எதிர்ப்பவள், அந்நிய புருஷனை யணைபவள், குழந்தையையும் புருஷனையும் கொன்றவள் ஆகிய இப்பாவிகள் அடைந்தநரகத்தில் நாங்களும் அடைவோம்,என்று பெண்கள் கூறினர்கள். அதுகேட்ட குபேரனதுதங்கை அதைக்கொடுத்தவர்களுக்கு என் ஆபரணமுழுவதும் சிவனாணைப்படி தருவேன் என்று கூறினாள். அச்சமயம் அவள்பேசியதைக்கேட்ட விபசித்துமுனிவர் அவர்களிடத்திற்சென்று ஏன் கவலைப்படுகிறீர்கள் உங்களாபரணம் இதுதானோ என்று அந்த மூக்கணியைக் கொடுத்தார். குபேரன் தங்கை மனமகிழ்ந்து அதனை வாங்கி இருகண்களிலும் ஒற்றி இதனால் எண்ணாத எண்ண மெல்லாமெண்ணி வருந்தினோம். அங்ஙனம் வருந்தாவண்ணம் கொடுத்த நீரே எனக்குத்தமயனுவீர் என்று கூறி "வேதியரே நீர்எத்தேசத்திலிருப்பது? இப்போதுஎத்தலத்தை நாடிச்செல்வது? இந்தவனத்தில் ஏன் வந்தீர்? உமது சரீரம்இளைத்ததற்குக்காரணம் யாது? என் ஆபரணம் உம்மிடத்தில் எப்படி வந்தது? இதை என்னிடத்திற் கொடுத்த விதம் என்னை? விபரமாகச்சொல்லுவீர்" என்றுவினவினாள். முனிவர் அது கேட்டு மொழிகின்றார்.

"பெண்கள் நாயகமே! நான் கோசலதேசத்தில் மணிபிங்கலை என்னும் ஊரிலுள்ளவன், ஒரு குறைவுமின்றி வாழ்ந்துவந்தேன். அப்பொழுது தாய், தந்தைமுதலிய சுற்றத்தார் இறந்தார்கள். நானும் மனைவியும் சிறிதுகாலம் இல்லறத்திலிருந்தோம். பின் வறு

மைப் பிணியால்என்மனைவியும் இறந்தாள். நான்ஒருவன் மாத்திரம் இறவாமற் பேய்போலலைந்து நிற்கின்றேன். அழகிலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் என்மனைவியை நிகர்ப்பவர் ஒருவருமில்லை. பேய் மிருகம் முதலியவற்றிற்கும்மனைவிகளுண்டு. அதனையில்லாத என் போன்ற பாவிகள் இவ்வுலகில் எவர்உளர். இனிப் பொருள்முதலிய வற்றில்விருப்பம்இல்லை. முத்தியடையவிரும்பினால்அன்பின் இலக்ஷணம்சிறிதுமில்லை. ஒருசிவகணநாதர்இப்படிப்பட்ட என்னைநோக்கி விருத்தாசலத்துக்குப் போவாயாகில் விசேஷ பெருமையைப் பெறுவாய் என்றனர். அத்தலம் எத்திசையிலிருப்பது என அறிகிலேன். ஒருமாநிழலிற்படுத்திருந்தேன். அப்பொழுதுஇம்மூக்கணி என் மடியிற் கிடந்தது. அதை உன்னிடத்திற் கொடுத்தேன். இவ்வளவே; வேறில்லை. என்று விபசித்து முனிவர் கூறினர். கூறியதைக்கேட்ட குபேரன்தங்கையும் இவர் தெய்வமுனிவர், இவரது செயலனைத்தும் சிவபெருமான் திருவிளையாடல் போலும் என்று அவர்உண்மைநிலையை அறிந்து பொய்கையிற் பொதிசோறு உண்ணக்கொடுத்து எல்லா ஆபரணங்களையும் அம்முனிவர் பால் தந்து இவைகளைத்திருமுதுகுன்றநாதர் திருப்பணிக்கு உபயோகப் படுத்தும்படி செய்வீர் என்று சொல்லி அவரையும் விமானத்தில் ஏற்றி அத்தலத்திற்கொண்டுவந்துவிடுத்து அதன்மகிமையுரைத்து மற்றமாதர்களுடன் தெய்வலோகத்துக்குச்சென்றாள். (அவர்தேவ மகளிர்; இவர் மனிதர்; அவர் செல்வமுற்றவர்; இவர் கட்டிக் கோவணமற்றவர். கணநாதர்கிருபையினால் அல்லவோ இவர்களைச் சந்தித்தது. விதி தவறினாலும் கற்பகவிருக்ஷமும் குருவாக்கியமும் பெரியோர் வார்த்தைகளும் தவறுகமாட்டா.)

விபசித்துமுனிவர் மணிமுத்தாநதியில் மூழ்கி நகைகளைவைத் தற்குப்பல இடங்களை நினைத்துக்கொண்டு கரை ஏறினர். அப்பொழுது ஆகாயத்தில் அரனருளால் அசரீரிதோன்றி "விபசித்துவே, இத்தலத்தில்வந்ததினால் பிறவிகளை நீங்கினாய். ஆபரணங்களைக் கற்பகவிருக்ஷமாகிய வன்னிமரத்தில் வைப்பாய். கணநேரத்துள் காரணரிய முத்தியடைந்தாய். உரோமசர்பால் உபதேசம் பெற்று முற்பிறப்பிற்செய்து முடியாத தவத்தை இப்பொழுது முடித்துக்கொள். கடவுளும் காக்ஷி கொடுத்தருளுவார்." என்று கூறிற்று. அதுகேட்ட முனிவர் மனமகிழ்ந்து நகைகளை வன்னிமரத்தில் வைத்துவிட்டு உரோமச முனிவருடன் சென்று வணங்கி

அசரீரிவாக்கையுரைத்தலும் உரோமசர் கேட்டு ஆனந்தங்கொண்டு இவ்விபசித்துவுக்கு இறைவனருள் எதனாலுண்டாயது என்று எண்ணி, பின் பெருந்தவத்தால் என்று தெளிந்து அவருக்குச் சிவஞானோபதேசஞ் செய்தனர். விபசித்து கேட்டு மனமகிழ்ந்து நதியில் நீராடிப் பழமலைநாதரை வணங்கித் துதித்துப் பஞ்சாக்ஷர செபஞ்செய்து துறவுபூண்டு குருபக்தியுடன் சருகு, நீர், காற்று, அருந்திப் பஞ்சாக்கினி மத்தியில் ஒரு காற்பெருவிரலை நிலத்தில் ஊன்றி நெடுங்காலம் கடுந்தவம் புரிந்தார். அத்தவமாகிய அக்கினி மூவுலகங்களிலும் சென்று மூண்டதால் தேவர் யாவரும் நடுங்கிப் பெருந்துன்பமுற்றார்கள்.

பெரியநாயகியார் இந்நிலையைத் திருவுளத்திற்கொண்டு பழமலைநாதரை வழிபட்டு நின்று "எமது தலைவரே! இம்முனிவன் செய்த தவாக்கினி எங்கும் பரவி எல்லாவுயிர்களையும் வாட்டியதால் தேவரீர் எழுந்தருளித் தரிசனந்தருதல் வேண்டும், என்று பிரார்த்திக்க, பழமலைநாதர் முக்கண்ணும், நாற்புயமும், சந்திரனையும் கங்கையையும் தரித்த சடாமுடியும் உமையின் இடப்பாகமும் செம்மேனியும் விளங்கும்படி விபசித்துவுக்கு எதிரே தோன்றியருளினர்; அப்பொழுது அளவில்லாத உயிர்களும் ஆனந்தங் கொள்ளவும், அந்தர துந்துபி முழங்கவும் தேவர்கள் பூமாரிபொழியவும், விபசித்து முனிவர் கண்டு தரிசித்து வணங்கித் தோத்திரஞ் செய்தனர்.

மருளுறுத்தும் பெரும்பாச வலைவளைத்தைம் பொறியாய
வெருளுறுத்த நாயேவிப் புலவேட்டை விளையாடி
இருளுறுத்தும்வெறுவெளியினின்றேனை யெடுத்தாட்கொண்
டருளுறுத்துமுதுமலையிலருட்கடனின் பதம்போற்றி.

காவலிலாப் பெரும்பாசக் காட்டுவழிதிசைதப்பிப்
பாவமெனும்புலியலைப்ப விடயத்தீப்பரந்துசுடத்
தாவிவரு மாசைப்பேய் சுழீஇக் கொள்ளத்தடமாறிக்
கூவின் வாய்வீழ்வேற்குன் குளிர்ந்தமலர்ப்பதஞ்சரணம்.

எய்யாநான்முநனென் றுளனன்றே
யுய்யாவுடல மெடுத்தேனுன்றாண்
மெய்யாக் கண்டிலன் மெய்யிதுகரியே
யையாமுதுகிரியப்பா சரணம்.

அஞ்சு விதத்தா லாறுமதத்த அந்தகர் தொடையா லடுமதர்படையா
னெஞ்சு சுழற்று நினைவால்வினையா னிந்தனை விழைவா னிரயக்குழியா
வெஞ்சு நடிப்பா லெய்த்தேனத்தா லுந்தி யினிரையா லுறுபிணிவலையா
தஞ்ச நிருத்தா சரணஞ்சரணம். னந்தனன் முதுகிரி நாதாசரணம்.

இவ்வாறுதுதித்துநின்ற விபசித்துவைச் சிவபெருமான் திருவுள மகிழ்ந்து வேதியனே! நீ விருத்தாசலத்தின் திருப்பணிகளை முறைப்படி விருப்பத்தோடுசெய் என்றருளினர். விபசித்துவும் "சுவாமி, அடியேனுக்கு திருப்பணியைநிறைவேற்ற வருள்செய்து எப்போதும் இத்திருவுருவத்தோடு இருந்தருளவேண்டும் என்று கடவுளிடம் விண்ணப்பஞ்செய்ய சிவனும் அங்ஙனமேயாகுக என்றருள்செய்தார். விபசித்து வன்னிமரத்தில்வைத்தநகைகளையெடுக்கும்படி ஏறினதும், முனிவரே. நான்கற்பகவிருக்ஷம் இத்தலத்தில் சிவபூசை செய்யவந்தேன்; திருப்பணிக்குவேண்டிய பொருளைக் கொடுப்பேன் என்று வன்னிமரம் சொன்னது. விபசித்துவானவர் பழமலைநாதருடைய ஆலயத்திருப்பணிமுழுதும் அழகுறஅமைத்து தேர், தேரோடும்வீதி, சிவனடியார் இருக்குமிடம் இவைகளைச் செய்வித்து, நித்தியவிழா மாதவிழா நந்தவனம் பலவாத்தியம் யானைகள் தேவதாசிகள் பசுக்கூட்டங்கள் மடாலயங்கள் இவைகளை ஆலயங்களுக்கு அங்கமாக ஏற்படுத்திச் சிவபெருமான் திருவடியில் இரண்டறக்கலந்தனர். இனித்திருமுதுகுன்றநாதர் செய்தருளிய திருநிருத்தத்தைக்கூறுவாம்.

திருச்சிற்றம்பலம்.

ஆறாவது

நிருத்தச் சருக்கம்.

அணுவளவுந் தவம்புரியாமல் அவமே புரிந்துழலும் பாவிகள் விருத்தகிரியிற்சென்று சிவபெருமானது திருவடிகளைஎளிதிற்பெறுகின்றார்கள்என்று பிரமா விஷ்ணுமுதலிய தேவர்கள் பழமலைநாதர் சந்நிதியிற்போய் வேதங்களையோதி வணங்கிநின்றார்கள். சிவபெருமான் திருவுள்ளக்கிடக்கையை அறிந்த விபசித்துமுனிவர் நந்திதேவருக்குக்கூற அவர் பழமலைநாதருக்கு விண்ணப்பஞ்செய்தார். அப்பரமன் அம்முனிவரிடத்தில் வைத்த பெருங்கருணையால் தேவதுந்துபி முழங்கவும், அடியார்கள் ஹரஹர என்று வாழ்த்தொலி

செய்யவும், பூதகணங்கள் வாத்திய கோஷஞ் செய்யவும், கண நாதர்கள் எள் விழ இடமின்றி நெருங்கி நிற்கவும் சோதிசொரூப ராய்த் தேவர்கள்முன்தோன்றியருளினர். தேவர்கள் அந்தச்சோதியைக் கண்டு நடுநடுங்கிக் கண்களைமூடி இங்ஙனந்தோன்றுதல் முறையோ என்று வேண்டலும், கடவுளும் காட்சி தந்தருளித் தேவர்களைப்பார்த்து நகைத்து உங்கள் சுகம் எப்படி என்று வினவியருளினர்.

தேவர்கள் "தேவாதிதேவரே, சிவசங்கரரே, எங்களுக்குத் தருமாதிகாரப்பதவிகளைத்தந்தருளினீர்; அப்பதவிகளில் வருபவர் ஒருவருமில்லை; எல்லாவுயிர்களும் மணிமுத்தாநதியில் மூழ்கி, எளிதில் தேவரீரது திருவடியடைந்து முத்திபெற்று நித்தியானந்தராய் இருத்தலால், பிரமபதவிக்கும் விஷ்ணுபதவிக்கும்வருபவர்களில்லை; சிவபூசையுமில்லை; தேவர்களுக்கு அவிப்பாகமும் அளிப்பதில்லை; அசுவமேதயாகங்களும் அதன்போகங்களும் இல்லை; போரும் வீர சொர்க்கமும்இல்லை; சூரிய நமஸ்காரமும் இல்லை; யமதண்டனையும் இல்லை; தானங்களும் இல்லை; மற்றத்தேவர்பதவிகளுக்கு வந்தவரு மில்லை. ஆதலால் தவத்தாற்பெற்றஸ்தானங்களும் அழிந்தன. நரகங்களும் பாவிகளில்லாமல் நாசமடைந்தன. எங்களுக்கு இதுவரை அதிகாரமில்லை, இனி நாங்கள் அதிகாரங்கொடுக்கும்படி தேவரீரே கிருபை செய்யவேண்டும்" என்று வேண்டினார்கள்.

சிவபெருமான் அத்தேவர்களை நோக்கி, "தேவர்களே வாருங்கள். இவ்விருத்தகிரியே எமது உருவம். இந்நதியேசிவசத்தி. ஒருமையுடன் அந்நதியில்மூழ்கிஎம்மைவணங்கினல் உயர்ந்த கதியளிக்கும்; அதையாவர்தடுக்கவல்லவர். மரமுதலிய அறிவில்லாத உயிரும் தம்மையடைந்தவர்களுக்கு உயர்ந்த பேறளிப்பதை நேரே அறிந்திருக்கின்றீர்கள். உண்மைப்பதவியளிப்பது அதன் இயற்கையாகும். முன் நீங்கள் இத்தலத்தில் வந்து தவத்தைச்செய்தவினலன்றோ பெரியதேவர்களாயினீர்; இப்பொழுது உங்களைத்தவஞ் செய்ய வேண்டாமென்று நீக்கினல் மற்றவர்களையும் விலக்குதல் நன்று. ஆதலால் நீங்களும் இத்தலத்தில் தவஞ்செய்தால் முத்தியைப்பெறுவீர்கள்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர்.

தேவர்களனைவரும் அவ்வாறே மணிமுத்தாநதியில் மூழ்கிப் பரமசிவனை இருதய கமலத்தில் தியானஞ் செய்தபொழுது சிவ

பெருமான் திருவருளால் வேதங்களும் ஆகமங்களும் எங்கும்நிறைந் தன. தேவர் குழுவிற் சிவனும் விளங்கி நின்று ஒற்றுமையையும் உண்மையையும் உணர்த்தும்படி திருவுளங்கொண்டு ஞானமய மாகிய திருவடிகள் எட்டுத்திக்கிலும் பிரகாசிக்கும்படி சத்திகள் முகத்திலும் பத்தர்கள்முகத்திலும் திருவருணோக்கஞ்செய்து மணி முத்தா நதிக்கரையில் திருநிருத்தஞ் செய்தருளினார். தேவர்கள் நிருத்த தரிசனஞ்செய்து ஆனந்தமாகிய அமுதைப் பருகி, அசை வின்றி, மெய்மறந்து ஒற்றுமையுற்றார்கள். சிவபெருமான் தேவர் கள் நிலைபறிந்து உமையைநோக்கி நகைத்து, தேவர்களுக்கு அன்பு உண்டாகும்படி பின்னும் நிருத்தஞ்செய்து தனித்துநின்று தேவர் கள் அஞ்ஞானம் நீங்கும்படி ஞானக்கண்ணைத் தந்து திருவைந் தெழுத்தின் உண்மை ஞானத்தை உபதேசஞ்செய்தருளுகின்றார். "இருளும் வெளியும் இல்லாத இடத்தில் அசைவின்றி நிற்பதே சமாதி. பூதாகாசம் மற்றைப்பிருதிவி அப்பு வாயு தேயு நான்கினுங் கலந்தும் கலவாமலும் நிற்பதுபோல, சிதாகாசமாயும் எல்லாப் பொருளுந் தாமேயாயும் எங்கும் நிறைந்து நாதத்துக்கு அதிபதி யாய் விளங்கிநிற்கும் பரமசிவமே நாம், உடல் உயிர் இரண்டிலும் உட்பொருளாய் விளங்குவதும் புறப்பொருளாய் விளங்குவதும் யாம் என்று தன்னுடலிற் றரிசித்தவனே சிவசொரூபமாவான். ஆகமங்களின் முடிவும் இவ்வாறே கூறும். தேவர்களே நீங்கள் இதனை அறிந்துகொள்ளுங்கள். ஒருவர் நமது உண்மை வடிவை ஞானாசாரியார் வழியாக அறிவார்களேயன்றித் தாமாக அறியார் கள். உடல், பொருள், ஆவி மூன்றும் உதவி, குருவிடத்தில், அரு ளுபதேசம் பெறுபவர்கள் நிழலும் மரமும்போல நீங்காது நிற் பார்கள். ஆசிரியர்களின் குலத்தையும் குணத்தையும் அவமதித் தவர்களும், அவரை நம்மில் வேறாக நினைத்தவர்களும், வஞ்சனை செய்தவர்களுமாகிய இவர்கள் நெடுங்காலம் நரகங்களிற் கிடந்து வருந்துவார்கள். ஆசாரியர்களுக்கு அருச்சனைசெய்வது நமக்குச் செய்வதாகும். எல்லாவுயிருமாயிருக்கின்ற நமக்குச் செய்த குற் றங்களை ஆசாரியர் நீக்கியருளுவர். அவருக்கு வஞ்சனையாற்செய்த குற்றங்கள் எம்மாலும் நீக்கமுடியா; எதனாலெனின்? முத்தியைக் கொடுப்பது அவரது தொழிலேயல்லாமல், வேறொருவருடைய தொழிலல்ல; ஆகலான், ஆசாரியர் பேரின்பத்தைக் கொடுத்தருள் அவற்றிற்குப் பிரதியுபகாரமாகத் தங்கள் உடல் பொருள் ஆவியை

85957

மனமாசொடு தத்தஞ்செய்தவர்கள் நரகங்களிற் கிடப்பர். அவர் பிறவியறுப்பவர் ஆசாரியர்களே. தேவர்களே நீங்களும் நம் உண்மையை அறிந்திருக்கின்றீராதலின் தெளிந்துகொள்ளுங்கள். உத்தமமாகிய இந்தச்சத்தியவசனத்தை உண்மையென்று உணராதவர்களே தங்கள் சிரங்கள் வெட்டுண்டு ஆயிரம் சுக்கலாய்ப்போய் எரிவாய் நரகத்துக்கு இரையாவார்கள். இது சத்தியம் சத்தியம்" என்று நிருத்தஞ் செய்தருளிய திருமுதுகுன்றநாதர் திருவாய் மலர்ந்து மறைந்தருளினர். அப்பொழுது தேவர்கள் கடவுள் திருவடிகளை வணங்கிச் செல்லுவார்களாய் "ஆசிரியரிடமாகப் பெற்ற தவத்தையுடைய பெரியோர்களே எப்பொழுதும் நீங்காமலிருப்பார்கள். அப்படிப் பெறுதவர்கள் நிலைபெற்றிருக்கமாட்டார்கள் என்றுரைத்துச் சென்றார்கள். மணிமுத்தாநதியில் திருநிருத்தஞ் செய்த சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய உண்மைப்பொருளை அன்புடன்படிக்கும் அடியார்கள் அசுவமேதயாகபலனிலும் அநேக பலனையடைந்து பிறவிப்பிணி நீங்கிச் சகலசித்திகளும் முத்தியும் பெறுவார்கள் என்று அனவர்த்தியென்னுந் தேவிக்கு நாதசன்மா கூறினர்.

திருச்சிற்றம்பலம்.

ஏழாவது

அகத்தியச் சருக்கம்.

திருமுதுகுன்றநாதரின் திருநிருத்தத்தைக் கூறினோம். உலகிலுள்ள உயிர்கள் யாவும் உய்யும்படி அகத்தியமுனிவர் இவ்விருத்தகிரிக்கு விருப்பத்தோடுவந்த சரித்திரத்தைச் சொல்லுகின்றோம்.

விந்தமலை வளர்ந்து சூரிய சந்திரர்கள் செல்லும் வழியைத் தடைசெய்தது; அதனால் இராப்பகல் இல்லாதொழிய, பிராமணர்கள் நித்தியாநுட்டானம் செய்யாமலும் தேவர்கள் அவிப்பாகமில்லாமலும் பசியினால் வாடுதலால், மழை பெய்யாமல் துரும்புங் கரிந்துபோகுந் தன்மையைத் தேவர்களும் முனிவர்களும் பிரமதேவருக்குக்கூற, அவர் தமது குமாராகிய தவத்திற்பெரிய அகத்திய முனிவரை நோக்கி "நீ விந்தமலையின் செருக்கையடக்கி, வில்வலன், வாதாவியென்னும் அசுரர் இருவரையும் அழித்துவருவாய்', என்று கூறினர். தேவர் முனிவர் யாவரும் புகழ்ந்து துதிக்கவும்

பூமாரிபொழியவும், தேவமகளிர் நடிக்கவும், பஞ்சவாத்தியமொலிக் கவும், அசுரர்கள் அஞ்சவும், அகத்தியமுனிவர் புறப்பட்டுத் தீர்த் தங்களையும், பல தலங்களையும் தரிசித்து விந்தமலையின் சமீபத்திற் செல்லுதலும், நூறுயிரயோசனைதூரம் உயர்ந்திருக்கின்ற விந்தமலை யானது அகத்தியமுனிவரைக்கண்டு மனமுருகி எதிர்கொண்டு வணங்கிப்பணிந்துநிற்குநிலையை முனிவர்கண்டு மகிழ்ச்சியுடன்கூறு கின்றார். "யான் தென்றிசைக்குத் தவஞ்செய்யவிரும்பிச்செல்லுங் காலத்தில் உன்மேல் ஏறி யிறங்கிப்போதல் கூடாது. அது ஒரு தடையாயிருக்கின்றது. ஆதலால் பூமிக்குச்சமமாய் அடங்குவாய்; இப்படிச் செய்யாவிடின் உன்னையழித்துச் சாம்பராக்குவோம்." என்று முனிவர் கூறவும், படம் விரித்தாடும் பாம்பு மந்திரமொழி களைக்கேட்டதும் படத்தையொடுக்கிப் புற்றினுட் புகுவதுபோல விந்தமலை பூமியுள் ஒடுங்கியது. சந்திர சூரியர்கள் வழக்கம்போற் சஞ்சரிக்க, தேவர்முனிவர் யாவரும் மனமகிழ்ந்து பூமழை பொழிந் தார்கள். அகத்தியமுனிவர் வில்வலன் வாதாவியிடத்தில் தனித் துச் செல்லுதலும், அவரிருவரும் எதிர்சென்று பூசித்து அமுது செய்தருளும்படி வேண்ட, முனிவர் சம்மதித்தலும், வம்பனாகிய வில்வலன் தம்பியாகிய வாதாவியை ஆட்டு வடிவமாக்கி அறுத்துச் சமைத்து பாகஞ்செய்து படைத்தான்; அகத்திய முனிவரும் அமுதுசெய்திருந்தார். வில்வலன் வாதாவியை வருகஎன்று அழை த்தான்; அதனையறிந்த அகத்தியமுனிவர் சிவபெருமானருளால் அவ்விருவரையும் அழித்துவிட்டார். அனைவரும் வாழ்த்தொலி செய்தனர். முனிவர் கொடிய விந்தமலையைப்பார்த்த பாவந்தீரவும் அசுரர்களை அழித்த பாவந்தீரவும் விருத்தாசலத்துக்கு வந்து மணி முத்தாநதியில் மூழ்கிப் பழமலைநாதரை அன்புடன் அருச்சித்து வணங்கினார். பழமலைநாதர் எழுந்தருளி முனிவருக்கு நிருத்த தரிச னம் கொடுத்தருளினார். அகத்தியமுனிவர் நடனதரிசனஞ்செய்து பேரானந்தங்கொண்டு வணங்கி நின்று சுவாமீ, அடியேன் உமது திருவடியைவிட்டு நீங்காதிருக்கும் கைம்மாறே கைம்மாறென்று கருதிப் பிரார்த்தித்து முனிவர்களைத் தத்தம் இடங்களிற் செல்ல விடைகொடுத்துப் பழமலைநாதரை வழிபட்டுக்கொண்டு வந்தார். இனிக் கலிங்கராசன் சரித்திரத்தை இயம்புகின்றோம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டாவது
கலிங்கச் சருக்கம்.

பழமலைநாதரை வழிபடும் பாக்கியம் பெற்றவர்களைப் பழிக்க நினைத்தாலும் பழித்தாலும் பேய்வடிவாகிக் காடுகளிற்சென்று திரிவார்கள்; அவர்களைக் கூறுவோம்.

உரோமசமுனிவர் ஓமவிறகு, தருப்பை, புட்பம், மாவிலை முதலியன எடுத்துக்கொண்டு திரியும் வனத்தில் ஒரு நாள் பெரியோர்களை நிந்தித்ததனாற் பேய்வடிவம்பெற்ற ஒருவன் மெய்நடுங்க வாய்புதைத்து வணங்கிநின்றான். முனிவர் அவனைநோக்கி "நீ எங்கே செல்கின்றாய்; உனக்கு இந்த வடிவம் எதனால் வந்தது" என்று வினவலும் பேய்வடிவினன் பின்வருமாறு கூறுகின்றான். "யான் உயர்ந்தசாதிச் சூத்திரன், என்பெயர் கலிங்கன், அங்கதேசத்தில் இருப்பவன். நாடு, வீடு, மாடு, பெண்டிர், பிள்ளை, செல்வம் முதலிய எல்லா நலங்களிலும் குறைவில்லாதவன், அடுத்தவர்க்குக் கொடுப்பவன், மிகப்பசியுடன் நொந்துவந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லாது அன்னமளிப்பவன்; இவ்வாறு பலநலங்களும் பெற்று வாழ்ந்துவருங்காலத்தில், நிறைமொழி மாந்தராகிய ஒரு யோகியர் வாழ்வுபெற்றவர்சல்என்று என் வீட்டுக்கு வந்தனர் நான் என் விதிவசத்தால் அவரைக்கண்டு எழுந்து மரியாதைசெய்யாதிருத்தலை அந்த யோகி உணர்ந்து நீ என்ன வாழ்வு வாழ்கின்றாய் என்று கரம்விரித்துச் சிரித்து, உன்னை அறிஞர்கள் காணின். உடனே சூரியன்மேனியைக் காணவேண்டும்; நீ உன் மைந்தர்களுக்கு வாழ்வைக்கொடுத்து அருந்தவமுனிவர்களோடு அடைந்து தவஞ்செய் என்று கூறினார். அடியேன் அந்த யோகியைநோக்கி எங்கும் இடங்கிடையாமல்அலைந்து உருத்திராக்ஷம் கிழிந்த துணி யணிந்து, சாம்பலைப் பூசித் தரித்திரனாய் வீடுதோறும் நுழைந்து திரிகின்றாய்; நீ நிந்தகர்க்கு நிந்தகன். அப்படிப்பட்ட உன்னை யானும் கண்டு நகைப்பேன் என்று சினங்கொண்டு கூறினேன், அந்த யோகீஸ்வரர் அதிக கோபங்கொண்டு சூத்திரப்பேயே, நாம் உன்பால் அன்புடன் கூறிய நன்மொழிகளை யுணராது எம்மைத் தூஷித்த நீ பேய்வடிவங்கொள்வாய் என்று சாபமிட்டனர். நான் அவர் திருவடிகளைப் பற்றிக்கொண்டு அடியேன் செய்த குற்றங்களைப் பொறுத்தருளவேண்டும் என்று வேண்டினேன். அவர்

ஸ்ரீ விருத்தாசலத்திற்குச் சென்று உரோமச முனிவரைக் கண்டால் இச்சாபம் நீங்கும் என்று கூறினர். முட்டியபின் தலை குனிவது போல, சாபமிட்டபின் அவரை வணங்கினால் அவர் பாதங்கிடைக்குமோ! பின் பேய்வடிவானேன். அதுமுதல் எவரும் என்னைத் தொட்டதுமில்லை. வயிரவக்கடவுளும், அவர் சேனாபதியும், சேனைகளும் அன்னந்தண்ணீர் ஆதிய பதார்த்தங்களைக்கையினற்றொட்ட பொழுதே என் கையறும்படி வெட்டுவார்கள். இருக்கவும் நிற்கவும் இடமில்லாமல் மழை, வெய்யில், காற்று இவைகளால் வருந்தி நித்திரையின்றித் திரிந்து நிற்கின்றேன். என் உடம்பில் எலும்பு மாத்திரம் இருக்கின்றது; அணுவளவு மாமிசமும் இல்லை. யான் என்செய்வேன்; மிகவும் வருந்தினேன். அத்துன்பங்களுக்கு எல்லையில்லை; இத்துன்பம் நீங்கும்படி தேவரீர் திருவடிகளில் அடைக்கலம் புகுந்தேன்" என்று கூறிய கலிங்கன்மீது உரோமசமுனிவர் கிருபைசெய்து "கலிங்கனே, உன்னிடத்தில் யோகீசர் சாபம்வந்து கிட்டியது, உன் மலபரிபாக காலம்வந்து தோன்றியதாகும். முற்பிறப்பிற் செய்த பாவமனைத்தும் அநுபவித்துத்தீர்ப்பதற்கே அவர் சாபம்தந்தார். அதுபற்றி அஞ்சாதே" என்று கூறி அவன் மெய்யிற் கரம்வைத்தனர். கருணையே உருவமாகிய சிவனடியார் திருவடித் தரிசனமே பாப விமோசனமாகும். அவர் கூறும் நல்லுரைகளை உள்ளத்திற்கொள்வதே தவங்களாகும். அவர் ஒருமையுடன் கூறும் சொற்களைக்கேட்பதே ஜீவன் முத்தியாகும். அவர் உள்ளமுவந்திருப்பதே முத்தியாகும். "கலிங்கனே நமது திருவருணோக்கமே முன்னுள்ள பேய்ப்பிறவி நீக்கி மனிதப்பிறவியாக்கியது. ஆதலால் மணிமுத்தாநதியில் மூழ்கிப் பழமலைநாதர் திருவடிகளைத் தரிசனஞ் செய்வாய்" என்று உரோமசமுனிவர் உரைத் தருளினர். அக்கலிங்கனும் மணிமுத்தாநதியில் மூழ்கிப் பழமலைநாதரையும், பெரியநாயகியையும் வணங்கிக் கண்களில் ஆனந்தபாஷ்பஞ்சொரியத் தரிசித்துத் துதித்து மனமகிழ்ந்து இம்மையில் இராஜபோகங்களையும், மறுமையிற் றேவர் பதங்களையும், அநுபவித்தொழித்துப் பின் சுத்தமாகிய முத்தியைப் பெற்றான். தவமுனிவர்களைத்தரிசித்தவர்களுக்கும், தூஷித்தவர்களுக்கும் வரும் பலன்களை அறிந்து கொள்வதற்கு இக்கலிங்கனே சாக்ஷி. பெரியோரைநிந்தித்த மூடர்களும், பாழுங்கிணற்றருகில் நின்ற சிறுபிள்ளைகளும் சமம். ஆனால் கிணற்றில்விழுந்தசிறுவர்கள் திரும்பப் பூமியிற்பிறந்து செல்வத்தை

யடைவார்கள். பெரியோர்களை நிந்தித்த கொடியவாய்களையுடைய நாய்கள் ஒவ்வொரு சொல்லுக்கு ஒவ்வொரு நரகமாகக் கிடந்து வருந்துவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாவது

கலியகல் சருக்கம்

சௌனகாதி முனிவர்கள் சூதமுனிவரை வணங்கி, விருத்தாசலத்தின்பெருமையைக் கூறியருளும் என்று விண்ணப்பஞ்செய்ய, சூதமுனிவர் உருத்திரசங்கிதையிற்கூறிய கலிதொலைத்த சரித்திரத்தைச் சொல்லுகின்றார்.

சனற்குமாரர் முதலிய முனிவர்கள் மேருமலையிற்சென்று பிரமதேவரை வணங்கிநிற்ப, அத்தேவர் அவர்களைநோக்கி உங்களுக்கு நேர்ந்த துன்பம் யாது என்று வினவ, சனற்குமாரமுனிவர் சொல்லத்தொடங்கினர். "முனிவர்க ளனைவரும் கலியின்வசப்பட்டதனாற் றுன்பமுற்றார்கள். அரசனும் சூத்திரனாயினன். மழையும் பெய்யாமல் மறுத்தது. அதனால் தேவர்களுக்குப் பூசையில்லை. தானதருமம் இல்லை; தவமும் இல்லை. வேதநெறியைவிட்டார்கள். கண்டவர்கள் வேதமோதுகின்றனர். பிராமணர் அரசன் ஏவலின்படி அடங்கிநடக்கின்றனர். வேதங்களை ஓதுகின்றிலர். அவற்றின் பெருமைகளையும் எண்ணிலர். இகழ்ந்து திரிகின்றார்கள். முனிவர்கள் யோகம் ஞானம் செபம் பொறுமை முதலிய குணங்களைக் கைவிட்டனர். பேரின்பத்தைக்காட்டிலும்சிற்றின்பமேசிறந்தது என்கின்றனர். மனைவி மைந்தர் வார்த்தைகளுக்குமேன்மையதிகம். தாழ்ந்தவர் உயர்ந்தவராகின்றார். மாணாக்கர்கள் குருவிடத்தில் வாதஞ்செய்கின்றனர். சிவபூசைவிதிவழுவி அவமே செய்கின்றார்கள். மெய்யை நீக்கிப்பொய்யையேபுகலுகின்றார்கள். சூத்திரர்கள்யாகஞ்செய்கின்றார்கள். அரசன் காமவிச்சையும் பெண்கள் கூட்டமும் சூதும் தீயவழியிற் பொருள்தேடுதலும் உடையவனாகின்றான். ஒருவர்செய்யும் ஆசாரங்களை மற்றவர்செய்கின்றார்கள். புண்ணியமாகிய சிவவேடத்தைப்பூண்பவர் ஒருவருமில்லை. பிரம விஷ்ணுக்களால் அறியமுடியாத பரமசிவனை நிந்தனை பண்ணுகின்றார்கள். பொய்ப்பொருளைப் போற்றுகின்றார்கள். மெய்ப்பொருளைத்தூற்றுகின்றார்கள். குடும்ப

மாகிய சமுத்திரங்களில் கொலைமுதலிய துன்பங்களாகிய முதலைகள் வந்து எங்களைஇழுக்கின்றன. அவைகள் விட்டு நீங்கும்படி தேவரீர் மாலுமியாக நின்று எங்களைக்கரையேற்றியருள வேண்டும்'' என்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

அதனைக்கேட்ட பிரமதேவர் அவர்களை நோக்கிப்பின்வருமாறு கூறுகின்றார். "கலியே இல்லாத பதியொன்றுளது' எந்தக்காலத்திலும இந்தக்கலி அந்தத்தலத்தை யடைவதில்லை. அத்தலத்தை யடைந்தவர்களுக்குப்பெரும்பிணிகள் யாவும்அகலும். அக்கினியும் சூடும்போலச்சத்தியும் சிவனும் பேதமின்றி விளங்குவர். அத்தலம் நித்திய கல்யாணமாய் நிகழும். கலியே இல்லாத அப்பழமலைப்பதியைத்தரிசித்தவர்களுக்குச்சகலவித்தைகளும் சித்திகளும் முத்தியும் உண்டாகும். நாம்முற்காலத்தில் அத்தலத்திற்சிவபூசைசெய்து சிருஷ்டித்தொழிலைப்பெற்றோம். மகாவிஷ்ணுவும் வஞ்சகஅரக்கர்களை வெல்லும் வரம்பெற்றார். திருவிடைமருதூரில் தவஞ்செய்த தேவல முனிவரும் இத்திருமுதுகுன்றிற் சிவபூசைசெய்து நம்மால் அடையமுடியாத நித்தியத்துவத்தைப் பெற்றார். யாக்கினவர்க்கியர் சிவபூசை செய்து வேதப்பொருளையும் ஞானசித்திகளையும் அடைந்தனர். சுக்கிரனும் சிவபூசையால் அசுரகுருத்துவம் பெற்று மந்திரசித்தியும் எய்தினன். சிகண்டி என்பவனும் சிவபூசையாற் சித்திகள்பல பெற்றான். விசுவாமித்திரரும் சிவபூசையால் வேதமுனிவராய் விளங்கினர். வசிஷ்டரும் விசேஷபூசையுடன் ஒருயாகஞ் செய்தார். அந்தயாகத்தில் அகத்தியர் முதலிய முனிவர்கணங்களும் இந்திரன்முதலிய தேவரும் சந்திரசூரியரும் சதுர்மறைகளும் வந்து அவிப்பாகம் வாங்கினார்கள். நமது பழமலை நாதரும் மற்றவர்போல வடிவங்கொண்டு வந்து தம் கரத்தால் அவியைவாங்கி அமுது செய்தருளினர். அக்காலத்தில் அசுரர்களை யழிக்கும்படி தேவர்கள் வருதலும், அதனைக்கண்ட அசுரர்கள் அஞ்சிக் கடலிற் புக்கொளிப்ப, அகத்தியமுனிவர் அக்கடலை ஆசமனஞ்செய்து பருகியதும், வெளிப்பட்ட அசுரர்களைத் தேவர்கள் அழித்தார்கள் இஷ்ட சித்திகளை யெய்தினோர் இவர்கள்மாத்திரமல்ல. இன்னும் இங்கேநம்மாற் சொல்லப்பெறாத மற்றவர்களும் எண்ணில்லாதவரங்களைப்பெற்றார்கள். ஆதலினால் நீங்கள் அத்தலத்திற்குச் செல்லுங்கள்.'' என்று பிரமதேவர்முனிவர்களுக்கு இவ்வாறுகூறியருளினர். அவரதுஉபதேசமொழிகளைக்கேட்ட முனிவர்களனைவரும் அந்தத்

தலத்தையடைந்து புண்ணியமடுவில்மூன்றுகாலங்களிலும்மூழ்கிப் பழமலைநாதரைப் பூசித்து, வலம்வந்து செபித்து, துன்பங்கள் நீங் கப்பெற்றுப் பலவரங்களையும், ஞானத்தையும், கலியில்லாத சுகத் தையும் அடைந்திருந்தார்கள். உடலைவாட்டி ஒறுத்தலும் வெறுத் தலுமின்றி, இத்தலமகிமையாற் சிறிது காலத்துள் தவத்தின்பலன் கள் யாவும் சித்திபெற்றன என்று முனிவர்கள் தங்களுக்குள் அதி சயங்கொண்டு அத்தலத்தில் அளவில்லாதகாலமிருந்து சிவபூசை செய்துவந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

பத்தாவது

சுவேதச் சருக்கம்.

முன்னொருகாலத்தில், குருகுலத்திற் பிறந்த சுவேதன் என் னும் அரசன் ஐம்பது கோடி யோசனைதூரம் அகன்ற உலகமுழு வதையும் ஒருகுடையின்கீழ்ப்பெருமையுடன்அரசுசெய்து விருத்த பருவத்தினனுய்த் தன்மனைவியோடும் பூமியைச் சுற்றிவருங்கால், மனைவியிறக்க, அதனைக்கண்டு அடங்காத்துயரங்கொண்டு, மனத் தளர்வுற்றுச் சகலசுகங்களையும் வெறுத்துப் பின் அசுரகுருவால் உபதேசம்பெற்று, யமவாதனை சிறிதுமில்லாத தலத்தை நாடிச் சென்று, திருவானைக்கா, திருத்தவத்துறை, திருமழபாடி, திருவை யாறு என்னுஞ் சிவதலங்களைத்தரிசித்து, திருவதிட்டையில் வந்து சுவேதமுனிவனுய்த் திருமுதுகுன்றினிற் சென்று, மணிமுத்தாநதி யில் மூழ்கிப் பழமலைநாதரைப்பணிந்து வலம்வந்து அகத்தியமுனி வரையடைந்து அன்புடன் வணங்கிநின்று, சுவாமீ, அடியேன் தவம்புரியுந்தலத்தை யருள்செய்யவேண்டும் என்று விண்ணப்பஞ் செய்தான்.

" இவ்விருத்தாசலத்தில், தவஞ்செய்தவர் எவரும் இறப்ப தில்லை; குபேரனும், விசுவாமித்திரரும், சிறந்ததேவரும், பிரமாவும் பெரிய வரங்களைப்பெற்றார்கள். இத்தலத்தில் வந்தவர்களில் வரம் பெறுமற்போனவர்கள் ஒருவருமில்லை. அநாதியாகிய சுயம்புலிங் கத்தின் பெருமையும் மணிமுத்தாநதியின் பெருமையும் எனது பரமகுருவாகிய முருகப்பெருமான் அருளியதைக்கேட்டு, நாமும் இத்தலத்திற்குவந்து பூசித்து, சிவயோகம்சிவஞானம்முதலிய சகல

பேறும் பெற்றோம். இத்தலத்தின்மகிமை மன முதலியவற்றிற்கும் எட்டாதது. நீயும்இத்தலத்திலிருந்து மனக்கவலையைநீக்கிப்பெருந் தவத்தைச் செய்வாய்" என்று அகத்திய முனிவர் கூறினர். அது கேட்ட சுவேதமுனிவர் அகத்திய முனிவர் அருளியபடி சரீரவாழ் வையும் சகல வின்பங்களையுந்துறந்து, மணிமுத்தாநதியில் மூன்று காலங்களிலும்மூழ்கி விபூதி ருத்திராக்ஷந்தரித்துப்பழமலைநாதரைப் பூசித்து வலம்வந்து பஞ்சாக்ஷரசெபஞ்செய்து சிவனடியார்களைப் பூசித்து அறுசுவையுடன் அமுதளித்திருந்தார். அதுகாலை, பழமலைநாதர் சுவேதமுனிவரிடத்தில் எழுந்தருளிப் பிரமனுக்கு உப தேசித்த மந்திரத்தை உபதேசித்து இத்தலம் நமது வடிவமாகும் இந்நதி எல்லா நதிகளுக்கும் அரசாய் விளங்கும், இத்தலத்தில் தவஞ்செய்வாய்" என்றுதிருவாய்மலர்ந்துமறைந்தருளினர். சுவேத முனிவர் சிவபூசை, சிவனடியார் பூசை, தானம், தருமம் இவைகளை விருப்பத்தோடு பெருக்கித் தவத்தையும் சந்தோஷத்துடன் செய் தனர். கன்றையிழந்த பசுப்போலச் சிவபெருமான் சுவேதமுனிவ ரெதிரே வெளிப்பட்டு நின்று "சுவேதனே இன்றுமுதல் நீ சுதபன் என்னும் பேரைப்பெறுவாய். அன்றியும் நந்திதேவனுடைய சுகத் தையும் பதவியையும் நல்கினேம்" என்று அருளிச் செய்தார். சுவேதர் "அடியேன் பிறவித்துன்பம் யமவேதனை நரகத்துன்பம் இவற்றால் மனஞ்சலிப்படையவில்லை. பிறத்தல் இறத்தலால் தலை தடுமாறித் தேவரீர் திருவடி மறப்பேனுகில் மாறுதல் உண்டாகும். அதனால் இத்தவத்தை இழந்து விடுவேனே என்று நினைந்து பிறத் தலுக்குப்பயந்தேன். ஆதலால்இத்துன்பத்தை நீக்கியருளல்வேண் டும். சுவாமீ இப்போது தரிசனந்தந்தருளியதுபோல எப்பொழுதும் உமாதேவியாருடன் நின்று அருள்செய்யவேண்டும். தேவரீர் திரு வடியில் நேசங்குன்றுதவாறு வரங்கொடுத்தல் வேண்டும்" என்று சிவபெருமானிடத்தில் விண்ணப்பஞ்செய்தார். அம்முனிவரெதிரே பரமசிவனும் நகைத்தருளி அப்படியே ஆகக்கடவது என்று அரு ளிச்செய்தார். சுவேதரும் அந்தமுதன்மையான வரத்தைப்பெற்றி ருந்தார். இனி, சிவனடியார் பூசையைச்சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

பதினொராவது
அன்பர்பூசைச் சருக்கம்.

காந்தபுராணத்திற் சிவரகசியகண்டத்திற் கூறிய பழமலையில் வாழும்அன்பர்பூசையைச்சொல்லுகின்றோம். பூர்வத்தில் ஒரு வணிகனுக்கு நான்குபுதல்வர்கள் இருந்தார்கள். அவர்களுள் மூத்தவன் காசியிலிருந்துவரும்சிவனடியார்களைக்காசிவிசுவேசராகப்பாவித்துப் பூசித்துத்தேகாந்தத்தில் அக்கடவுள் திருவடியிற்சேர்ந்தான். இரண்டாவதுபுதல்வன் சோமேச்சரமென்னுந் தலத்திலிருந்து வரும் அடியார்களைச்சோமேச்சரராகப்பாவித்துப்பூசைசெய்து சோமேசுரர் திருவடியடைந்தான். மூன்றாவது புதல்வன் பந்துக்களின் புதல்வர் பொருளை அபகரித்து அதனால் தனபதியாகிச் சிதம்பரத்திலிருந்துவரும் அடியார்களைச் சிதம்பரேசுரராகப்பாவித்துப் பூசித்துப் பின் சிற்சபேசர் திருவடியிற் சேர்ந்தான். நான்காவது புதல்வன் பழிபாவங்களுக்குப் பயப்படாது தீயவழியிற் பொருள் தேடிப் பிணியடைந்து தன்னைப்பிடித்துவருத்திய பிரமகத்திதோஷத்தால் மூர்ச்சித்துக்கிடப்பதைத் தகப்பன் கண்டு ஒரு வயதுசென்ற பிராமணரிடத்திற்கூற, புராணக்கடலில் மூழ்கிய அப்பிராமணோத்தமர் அவர்களைநோக்கி "நீங்கள் தேவர்களும் முனிவர்களும் தெரிசித்து வணங்கும் திருமுதுகுன்றிற் சென்றால் இந்த வியாதி நீங்கும்" என்று கூறினார்.

அதனைக்கேட்ட வணிகன் தன்புதல்வனோடும் பந்துவர்க்கத்தோடும் விருத்தாசலத்தை யடைந்து மணிமுத்தாநதியில் மூழ்கிப் பழமலைநாதரையும் பெரியநாயகியம்மையையும் வணங்கி நூற்றெட்டுத்தரம்வலம்வந்து துதித்துச்சிவனடியார்களுக்குத் திருமடங் கட்டி அன்னவஸ்திர முதலியன அளித்துவந்தார்கள். இப்படி ஒரு வருஷம் வரை நியமந் தவறாமற் செய்ததனால், புதல்வன் பிரமகத்தி தோஷமும் பிணியும் நீங்கித் தன் பிதாவோடும் சிவன் திருவடியிற் சேர்ந்தான். அவன் உறவினர்களும் மோக்ஷமடைந்தார்கள்.

இந்த வணிகமக்கள் நால்வருள் இளையவன் பெற்ற உயர்ந்த பேற்றை அகத்தியமுனிவர் சுவேத முனிவருக்குச் சொல்ல அவர் அம்முனிவர் அநுமதிப்படி விருத்தாசலத்திற்கு வந்து மணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து பழமலைநாதரை வணங்கித்துதித்துத் தாம் செய்த பூசையில் அபிஷேகித்த நீரைத் தன் பெயரால் சுவேதநதி

யென்றுசொல்லும்படி செய்து சிவனடியாரைப்பூசித்து அறுசுவை யுடன் அன்னமுதலியன அளித்துப்பழமலைநாதர் அருளால் பிறவித் துயர் நீங்கிப்பிரகாசித்தார். இதனை நைமிசாரணிய முனிவர்கள் கேள்வியுற்று இத்தலத்துக்குவந்து சிவனடியார்களைப்பூசித்துவரும் பொழுது சிதம்பரத்தில்எழுந்தருளியிருக்கும்ஸ்ரீநடராஜப்பெருமான் அம்முனிவர்களுக்குப்பிரத்தியக்ஷமாகி நடனதரிசனந்தந்தருளினர். சுமந்தமுனிவர் இத்தலபுராணத்தைச் சொல்லுங்காலத்தில் தெய்வ வன்மன் என்னுமரசன் கேட்டு வந்து மணிமுத்தாநதியில் மூழ்கிப் பழமலைநாதரைவணங்கிஅடியார்களையும்அன்பொடுபூசித்திருந்தான். சிவனடியார்கள் எவர்கள் வீட்டிற்சென்றபோதிலும் அந்த வீட்டில் தேவர்களும் முனிவர்களும் வந்து கூடுவார்கள். அல்லாமலும் அந்த வீடு சகல செல்வங்களாலும் சிறப்புற்றிருக்கும். சிவனடியார்களைப் பூசித்தவர்கள் இருபத்தொருதலைமுறை தம் சுற்றத்தவர்களுடன் பிறவிக்கடல் கடந்து முத்திக்கரை சேர்வார்கள்.

திருச்சிற்றம்பலம்.

பன்னிரண்டாவது

சிவ பூசா விதிச் சருக்கம்.

அனவர்த்தியைக்கு நாதசன்மாவானவர் சிவ பூசாவிதியைச் சொல்லுகின்றார். அறிவுடையஒருவன் பூசைகளுட்சிறந்தசிவலிங்க பூசையைமூன்றுவேளையுஞ்செய்தல் வேண்டும். அது கூடாதாயின், இருவேளை ஒருவேளை செய்யலாம். அப்பூசைக்கு அங்கசுத்தியிலும் அந்தக்கரணசுத்தியாகியபத்தியே மிகஉத்தமம். சந்திரன், சூரியன், சிரம், நெஞ்சு, திருமுறை, மணல், மண், அரிசிமா, விபூதி, பூரண கும்பம், கொன்றை, வில்வம், நீர், தருப்பை, பால், வேதிகை, சித் திரம், கோமயம், எள் இவற்றுள் ஏற்றதொன்றிற் சிவனை ஆவா கனஞ் செய்து அன்பினுற்பூசைபண்ணுக. சிவபூசை செய்யாதவன் எத்துணைக்கல்வி தவம் யாகம் உடையவனாயினும் அவன் செயல் போகமெல்லாம் செத்தவனுக்குச்செய்வதை ஒத்திருக்கும். சிவ பூசையில்லாதவன் கொடிய நரகத்திற்கிடந்து வருந்துவன்; அவன் ஒருவேளை பிறவி யெடுப்பினும் நோய் பேய் வறுமை யாதியால் வருந்திப்பிறந்திறந்துழல்வன். பூசையில்லாதவன் போசனம் புழுத் தபிணத்துக்கும் புலையன்கட்டத்துக்குஞ்சமம். சிவபூசைசெய்ப்வர் கள் உயர்குலத்தவனைத்தீண்டினும் காண்பினும் நினைக்கினும்பாவம்.

சிவபூசை செய்பவர் தவம், யாகம், தீர்த்தஸ்நானம் செய்யவேண்டியதில்லை. அவர் சிவகணநாதராய்த் தேவவிமானத்திற்றிரிவர். விருத்தகிரியிலிருந்து சிவலிங்கத்துக்கு ஒருகை நீரால் அபிஷேகஞ் செய்து ஒருபுட்பஞ்சாத்தினாலும் காசி, கங்கை' பிரயாகை, இமயம் இவைகளில் நெடுங்காலமிருந்து தவமுந் தருமமுஞ் செய்வதையொத்திருக்கும். ஒருநாள் சிவபூசை செய்தால் விரதம் சாந்தி கோடி அசுவமேதயாகம் இவைசெய்தபலன் உண்டாகும். மரணத்துன்பம் இல்லை. உள்ளன்போடு நீரும் பூவுங்கொண்டு நிர்மலராகிய சிவனைப் பூசித்தால் பொருள் புகழ் போகம் எண்சித்தி வித்தை நித்தியமங்களம் இவையாவும் கைகூடும். இந்திரன் பிரமா விஷ்ணு என்னுந் தேவர் மூவரும் சிவபூசைசெய்து பெருந்தேவராயினர். இலக்குமி சரஸ்வதி இந்திராணிமூவரும் அப்பூசையினால்மேற்கூறியதேவர்கள் உடம்பில் இடம்பெற்றார்கள். ஆரிடம் தெய்வம் இராக்கதம் படிகம் தீர்த்தம் சுயம்பு மலை ஆகிய இவ்விலிங்கங்களிற் பூசித்தால் யமதருமனும் ஏவியபணிகளைச்செய்வான். அன்பின்றிச்செய்தபூசை அன்பினாற்செய்தபூசை செருக்கினாற்செய்தபூசை விநோதமாகச்செய்த பூசை ஆகியஇவைகளாலும் வித்தை மெய்த்தவம் பத்தி உண்டாகும். பூமியையாள்வர். தொண்டராய்த்தினமும் இடைவிடாமற் பூசிப்பவர் மோக்ஷத்தைப்பெறுவர். புலையன் நன்றிமறந்தவன் பசுவினைவதைத்தவன் விரதபங்கஞ்செய்தவன் பெண்களையும் பிராமணர்களையுங்கொன்றவன் ஆகியஇவர்கள் சிவபூசை செய்தாற்பாவமுழுதும்நீங்கிச் சூரியன்போல் விளங்குவார். முற்றத்துறந்தமுனிவரும் சிவபூசைசெய்தவர்க்குநிகராகார்.

காலை உச்சி மாலை இம்மூன்றுகாலமுங்கடவுளைப் பூசித்தல்உத்தமம். சிவபெருமானைப்பிரதோஷகாலத்தில் முறைப்படி வணங்கினால் திரிகாலங்களிலும் தரிசித்த பலன் உண்டாகும். பிரதோஷகாலத்திற் பரமசிவனைப்பூசித்தாலும் தெரிசித்தாலும் பரிசித்தாலும் குழந்தை தாய்தந்தை கர்ப்பிணி குதிரை பசு பிராமணர் பெண்டிர் இவர்களைக் கொன்ற பாவமும் பொற்களவு ஆலயக்களவு செய்த பாவமும் நீங்கும். பிரதோஷ காலத்திற் சிவபெருமானைத் தெரிசித்தவர்களின்பாவம் பஞ்சிற்பட்ட தீப்போல நீங்கும். பிரதோஷகாலமாவது, திரயோதசித்திதியில் சூரியன் மறைவதற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையும் பின் மூன்றேமுக்கால் நாழிகையுமாகிய ஒரு சாமநேரம். அக்காலத்தில் ஆபத்துக்கு அஞ்சிச் சென்றவனும்

மழைக்கொதுங்கினவனும் ஆடல் பாடல் பார்க்கச்சென்றவனுமாய் பரமசிவனைக்கண்டு தெரிசித்தவனுக்கு ஞானமும் தவமும் உண்டாகும். கொடுங்கோன்மன்னனும்பிரதோஷகாலத்தில்வணங்கினால் அவன் பாவமனைத்தும் அகன்றுவிடும். பிரதோஷகாலத்தில் நெய், தயிர், பால், தேன், எண்ணெய், கரும்பு, இளநீர், சந்தனம், கனிரசம் இவைகளாற் சிவபெருமானை அபிஷேகஞ் செய்த பொழுது இடையிடையே அபிஷேகஞ் செய்யுஞ்சுத்தோதகம் தனித்தனி அபிஷேகஞ் செய்யும் சுத்தோதகத்தினும் பதின்மடங்கு பலன் அதிகமாகும். திருமஞ்சன முதலியவற்றைக்கொண்டு அபிஷேகஞ் செய்யின் ஒன்றுக்கொன்று நூறு மடங்கதிகமாகும். அங்ஙனஞ் செய்தவன் சிவசாரூபத்தைப்பெறுவன். முதலில் வில்வப்பழத்தினும் பின்வெந்நீராலும் அபிஷேகஞ்செய்தவனுக்குக் கோடிகோதானஞ் செய்த பலன் கிடைக்கும். அபரபக்கத்து அட்டமியில், பசுவினெய் எள்நெய் இவற்றிலொன்றினால் இயன்றவரை அபிஷேகஞ் செய்யின், கோடி கோதானஞ்செய்த பலன் கூடும். நூறுகோடி காலம்சிவலோகத்தில்வாழ்வர். விபூதியபிஷேகஞ்செய்தவன் சந்திரனுவான். பசுவின்தயிரால்அபிஷேகித்தவன் விஷ்ணுவாயிருப்பான். பசுப்பாலினால் அபிஷேகஞ் செய்தவன் குளம்பும் கொம்புகளும் பொன்னாற்செய்து பட்டினாற்போர்த்த அனந்தகோடி பசுக்களைச் சூரிய கிரகண புண்ணிய காலத்திற் பிராமணர்களுக்குத் தானஞ் செய்த பலன் அடைவன். தேனபிஷேகஞ்செய்தவன் அக்கினி தேவனுவான். நீராலபிஷேகஞ் செய்தவன் வருணனுவான். அமாவாசைக்கு முன் சதுர்த்தசியிலும் அமாவாசையும் சோமவாரமும் கூடிய நாளிலும் பசுவின் பாலினால் அபிஷேகஞ்செய்தவன் அழிவில்லாத பராமுத்தியடைவன். அபரபக்கத்தில் அஷ்டமியும் ஆதிவாரமும் கூடியநாளில் இளநீரபிஷேகஞ்செய்தால் இந்திரனுவான்.

சதுர்த்தசியில் தேன், நெய், எண்ணெய், கரும்புஇவைகளால் அபிஷேகஞ்செய்தவன் சாயுச்சியபதவி சாருவன். திருமஞ்சனத்தினாலும், தன்கையால் நந்தவனத்தில் எடுத்த புஷ்பங்களினாலும் சிவமூலமந்திரத்தினாலும் தினந்தோறும் சிவபூசைசெய்பவன் கார்த்திகைமாதத்துப் பூர்வபக்க ஏகாதசித்திதியில் நெய்யால் அபிஷேகஞ்செய்தால் கோடிதலைமுறைசுற்றத்தோடு கைலையில் வாழ்வான். தானேஉண்டாக்கியஒருவெள்ளெருக்கம்பூவைச் சிவலிங்கத்துக்குச்

சாத்திப்பூசித்தால், பொன்னைப்பிராமணர்களுக்குத் தானஞ் செய்த பலன் கிடைக்கும். அலரி, வில்வம், கருவூமத்தை, தும்பை தருப்பை, வன்னி, நாயுருவி, கருநெய்தல் இவைகளைச்சாத்திப் பூசித்தால் ஒன்றுக்கொன்று ஆயிரமடங்கு அதிகமாகும். ஆயிரம் கருநெய்தற்பூமாலையைச் சாத்தி அரனை அருச்சித்தால் மேலான முத்தியுண்டாம். எல்லாப்பூக்களும் பூசைக்கு ஏற்றனவாகும். ஆயினும் துர்க்கந்தம்வீசும்பூ, மணமில்லாதபூ, பூமியில் விழுந்தபூ, அரும்பு, சுத்தமில்லாதபூ, மயிர்சிக்கியபூ, வண்டு துளைத்தபூ, மலர்ந்தபூ இவைகள் ஆகாவாம். பூ இல்லையாயின், இலை, காய், புல், பத்திரம் இவைகள் சாத்தலாம். அவைகளும் கிடையாதகாலத்திற் பாவனையாற் றியானித்துச்செய்தல் நல்லது. அர்த்தயாமத்தில் கருவூமத்தம்பூ சாத்தினால் சிவலோகஞ் சேர்வான். நாயுருவியின் பத்திரத்தைச் சதுர்த்தசியிற் சாத்தினுற் சிவனடிசேர்வன். நெய் கலந்த குங்குலியத்தூபம் ஒரு மாதம் இட்டாலும், எண்ணெய்த் தீபமிட்டாலும் சாலோகஞ் சார்வன். பசுவின் நெய்பால், தீபம் வைத்தவன் அதன் சுடர் ஒன்றுக்கு ஆயிரம் சதுர்யுகம்வரை சிவலோகத்திற் சேர்வன். எண்வகைப்பத்தியால் ஈசனைப் பூசிக்கின்றவர் ஈனராயினும் இந்திரனவர். பிராமணர்களும் எண்வகைப் பத்தியில்லையாயின் ஈனராவர். சிவாலயத் திருப்பணி செய்தவர்களைச் சிவனென்று நினையாமல் மனிதரென்றெண்ணுவோர்க்கே எல்லா நரகங்களுமிருக்கின்றன. கண்ணுக்கு இனியபண்டங்களைக் கடவுளுக்குப் பிரீதிசெய்தவன் புண்ணியலோகஞ்சேர்வன். குருவுபதேசம்பெற்றவன் பூசையை இழந்தகாலத்தில், சிவன்கோயிலை வலம் வந்து வணங்கினால், பூசித்ததுபோலாகும். புத்தி, சாமர்த்தியம், வித்தை, பொருளாசை இவைகளால் வேதநெறி விடுத்து வஞ்சக மார்க்கத்தை உபதேசஞ்செய்யுங்குருவும், கேட்கின்ற சீடனும் நரகத்தில் வீழ்வார்கள். பரம்பரையாக வரும் ஆசாரியர் பாதம் பணிந்து உபதேசம்பெறும் நற்சீடன் சிவனையும் நற்குருவையும் ஒரு முகமாகக் காண்பான். அங்ஙனங்காணாது வேறாகக் கருதுபவன் கற்பகாலம்வரை நரகத்தில் வீழ்வன். தேவர்,முனிவர்,மனிதர் இவர்கள் தாபித்தலிங்கங்களும், பாவனை, சுயம்பு, வாணன், படிகம் பஞ்சலோகங்கள், இரசம், காந்தம், இரத்தினம், வெள்ளி, பொன் இவைகளால்,தாபித்தலிங்கங்களும் நான்குவருணத்தாரும் பூசிக்கலாகும். இதரர்களுக்கும் மாதர்களுக்கும் ஆகா. அவர்கள் அண்ணு

மலை லிங்கத்தைப் பூசிக்கலாம். பெண்கள் இரசலிங்கத்தைப் பரிசித்தாலும் நரகத்தில் விழ்வார்கள். பழுதுள்ளதும், வெந்ததும் வெடித்ததும் ஆகிய இலிங்கங்களை நீர்அருந்த நதி, கிணறு, குளம் முதலியவற்றில் வைத்தல்வேண்டும். பூசிப்பவன் வறுமை, பிணிகளால் வருந்துவான். இரண்டுநாள்வரை பூசையில்லாதொழிந்தவன் நாலுநாளைப் பூசை செய்யக்கடவன். மூன்றுநாள் வரை பூசை முரண்படுமாயின், அதற்கிரட்டிப்பான பூசை செய்தல் வேண்டும். மாதம் பக்ஷம் அநேகநாள் பூசியாதிருந்தாற் குருவாற் பிரதிட்டை செய்து சிவாலயத்திற்சென்று வணங்கிச்சாந்திசெய்யக்கடவன். சத்தியுஞ்சிவமுமாய்ப்பிரகாசிக்கும் உத்தமமாகிய இரசலிங்கம் பத்துக்கோடி லிங்கங்களுக்குச்சமம். அந்த இலிங்கத்திற்பூசித்தால் சத்துருநாசம் புத்தி முத்தி சித்திக்கும். அவ்விலிங்கத்தின்பூசைத்தீர்த்தத்தை உட்கொண்டவர்கள் பல் பிணிகளும் பிறப்புக்களும் நீங்கிப் பிரமன் முதலிய தேவர்பதங்களைப்பெறுவார்கள். பொருந்திய பாவமுழுதும் அக்கினியிலகப்பட்டவிறகைப்போல அழிவுறும். இவ்விலிங்கத்தை நிந்தித்தவர்கள் நரகில் வீழ்வர்கள். பிறந்தால் நாய் நரி பூனை ஆகியவற்றின் வடிவெடுத்துப்பின் புலையர்க்கு அடிமையாய் கூன் குருடு ஊமைகளாய்ப் பிறப்பார்கள். மரணாந்தத்தில் ஒருவன் வயிற்றில் இரசலிங்கமிருக்குமானால் அவன்பிதாமாதா ஆதியரைக் கொன்ற பாவமும் மதுபானஞ்செய்த பாவமும் நீங்கி, கோடி அசுவமேதயாகபலன் அடைவான். இனிய நிர்மாலியங்கள், மனிதர் முனிவர் தேவர் இவர்கள்பிரதிட்டைசெய்த இலிங்கங்களுக்கேயல்லாமல் ஏனைய லிங்கங்களுக்கு இல்லை. அந்நிர்மாலியத் துளசியோடு அபிஷேகநீரையும் உட்கொண்டாற் பிறவி, சாபம் நீங்கும். ஞானமுண்டாகும். ஞானயோகிகளுக்கேநிர்மாலியங்களாகும். சிவனடியாரல்லார் உண்டால் நெடுங்காலம் நரகிற்கிடப்பர். வேத விதிப்படி பூசிக்கும் பூசைத்திரவியங்கள் நிருமாலியங்களாகா. ஆகமவிதிப்படி பூசிக்கும் பூசைத் திரவியங்களே நிருமாலியங்களாகும். பிராமணரல்லாத மூன்று சாதியாரும் ஆகம விதிப்படி சிற்பாசாரியர் நினைத்துச் செய்த சிவலிங்கங்களைப் பூசைசெய்யக்கடவர். இந்தப் பெருந்தவத்தினோருக்கு இலிங்கபேதம் யாதுமில்லை. இனித்திருநீற்றின் பெருமையைக் கூறுகின்றோம்; கேளுங்கள்.

திருச்சிற்றம்பலம்.

பதின்மூன்ருவது
விபூதிச் சருக்கம்.

பிரமசாரி முதலிய நால்வகை யாச்சிரமிகளும் சிவபெருமான் அருளியபடி அவரவர்களால்விளைவிக்கப்பட்டவெண்ணீறு அவரவர் களுக்கே யுரியவாகும். மடம், யாகசாலை இவைகளில் விளைந்த விபூதி க்ஷத்திரியர்முதல் மூவரும் தரிக்கத்தகும். விறகினுல் விளைந்த விபூதியும் திருமடைப்பள்ளியில் உண்டாகிய திருநீறும் பெரியோர்மனையில் விளைந்த நீறும் பெண்களும் மற்றவர்களும் தரிக்கலாம். விபூதியை வடித்தெடுத்துக்கொண்டு நீரிற்குழைத்து மூன்று காலங்களிலும் நான்கு வருணத்தவர்களும் தரிக்கலாம். தவத்தர்கள் எக்காலமும் தரிக்கக்கடவர்கள். பெண்கள், சந்நியாசி, வானப்பிரஸ்தன், அவன் மனைவி, பிரமசாரி, குருவுபதேசமில்லாத வன் இவர்கள் நீரிற் குழைத்துத் தரிக்கலாகாது. சுத்தமாகிய வெண்ணிறவிபூதியை வடித்தெடுத்துக்கொண்டு தரித்தல் வேண்டும். வேதசிவாகமங்களில் விதித்தபடி விபூதியை உடல்முழுதும் உத்தூளனமாகப் பூசி முக்குறித்தொகுதி தோன்றத் தரித்தால், புண்ணிய தீர்த்தங்களில்மூழ்கி நூறுயாகஞ்செய்து பிராமணர்களு க்கு மூவுலகத்தையும் தானஞ் செய்தவர் அடையும் பலன்கிடைக் கும். சிரம் நெற்றி கழுத்து உடம்பு விலா கை கால் களினுறுப்புக் கள் ஆகியஇடங்களில் வெண்ணிற விபூதியைத் திரிபுண்டரமாகத் தரித்தவர்கள் சிவசாரூபமெய்துவர். விபூதியை நெற்றியிற்றிலதமா கவும் சதுரமாகவும் சூலம்போலவுந்தரிக்கலாகாது. விபூதியில் வாசம் கமழ்கின்ற சந்தன முதலியவற்றையும் சிறுமண்ணையும் கலத்த லாகாது. நீறணிந்தவனை நிந்தனைசெய்ய நினைத்தவனும் நிந்தித்த வனும் எல்லா நரகங்களிலும் வீழ்ந்து வருந்துவார்கள். இது நிச்ச யம். விஷ்ணுவின் அடையாளமான சங்குசக்கரத்தையும், சிவன் அடையாளமான சூலத்தையும் நெருப்பிற் காய்ச்சிப் பிராமணர் களுடையதோளிற்சுட்டிடின் சூடுண்டவனும் சுட்டவனும் எரிவாய் நரகிற்கிரையாவார்கள். அவர்களை இந்நாட்டை விட்டு ஓட்டும் அர சனே அரசன்.

கௌதமர் தம்மைத் தூஷித்த பிராமணர்களைக் கோபித்து, நீங்கள் இழிந்த மண்ணையிட்டுப் பரமசிவனையும் திருநீற்றையும் அடியார்களையும் பூமியில் நிந்தித்து நரகிற் செல்லுங்கள் என்று

சபித்தார். அந்நாள்முதல் அறிவில்லாத அரிபக்தர்கள் நிந்திப்பார்கள். வேதங்களை நம்பி விபூதியைத் திரிலோகத்தவரும் தரிப்பார்கள்; மும்மூர்த்திகளும்தேவர்களும்எல்லாஉலகத்தவர்களும்தரிப்பார்கள். எவ்வுலகங்களிலும் பிரமாணமாக வழங்கும் வேதங்களே, இம்மை மறுமை வீடென்னும் மூன்றையும் எளிதிற்றரும் முதற் சாதனமாயுள்ளது திருநீறே.மற்றவை பொய்ச்சாதனங்கள்என்று ஓதுகின்றன. உடலுக்கு உறுதிதருவதாகிய உணவை எல்லாரும் ஏற்றல்போல் உயிர்க்கு உறுதிதருவதாகியதிருநீற்றையும், உருத்திராக்கத்தையும் மகிழ்ந்து தரிப்பவர்களிடத்தில், சிவன் உமையொடு திரிந்தருள்வர். முத்தியென்னும் பெண்ணை முயற்சியுடன் வசப்படுத்தவேண்டில் மணிமந்திர ஔஷதங்களாகிய விபூதி, ருத்திராக்ஷ, பஞ்சாக்ஷரங்களைத் தரித்தல்வேண்டும். விபூதிருத்திராக்ஷங்களை நினைத்துத்தரிப்பவர்கள் பெறும்பேறுகளுக்கு எல்லையேயில்லை. அவர்களை வணங்கிப்பூசிக்கின்ற பூசையே பூசை. அவர்களுக்குக் கொடுக்கும் கொடையே கொடை. விபூதியானது தன்னைத் தரித்தவர்களின் வினைகளை நீறுசெய்வதால் அதற்குத் திருநீறென்று வேதம் விளம்பும். ஆன்மாக்கள் நரகில்விழாதபடிக்குப் பிறவிப்பிணிக்கு மருந்தாகத் தம தருமைத்தேவியாகிய உமையவள் காதில் இதனைச் சிவபெருமான் கொடுத்தருளினர். வெண்ணிற விபூதியைத் தரித்தவுடன் சகல பிணிகளும், வந்த வினைகளும், வரும் வினைகளும், பேயும், பிறப்பும் இறப்பும் இல்லை. சகலநன்மைகளுந் தழைக்கும். தீர்த்தங்கள் எவற்றிலும் விபூதியைவிடப் பெரியதீர்த்தம் இல்லை. பிரமாமுதலிய தேவர்கள், வியாசர் முதலிய முனிவர்கள், நந்திதேவர் இவர்கள் ஒருங்குகூடி யோசித்து, தருமம், தவம் முதலிய எல்லாவற்றிற்கும் விபூதி இல்லாவிட்டாற் பயனில்லையாகும்; என்று கூறினார்கள். வேகாத விபூதியும், வெந்து கரிந்த விபூதியும், செந்நிற விபூதியும் தரிக்கலாகாது. விபூதியில் வெண்மைநிறம் எவ்வளவு உண்டோ அவ்வளவும் மோக்ஷத்துக்குஏதுவாகும். போகங்களுக்கு முதலாதலிற்பூதியெனவும் அருளுடைமையால் இரக்ஷையெனவும் பெயர் கூறப்படும்.

திருச்சிற்றம்பலம்.

பதினான்காவது

உருத்திராக்கச் சருக்கம்.

திரிபுரத்தசுரர்களால் தேவர்கள்யாவரும் வலியிழந்து வருந்தி சிவனைக்குறித்து ஆயிரந்தேவவருஷம்வரை தவஞ்செய்தலும், பரமசிவன்பார்வதிதேவியாரோடு இடபாரூடராயெழுந்தருளிவந்து அவர்படுந்துன்பங்களைக் கண்டதும் முக்கண்ணினின்றும் நீர்த்துளிகள் விழுந்தன, அத்துளிகளே உருத்திராக்ஷமணிகளாகும். அவற்றுள் சூரியன்கண்ணிற்றோன்றியமணி பன்னிரண்டு பேதமுடையது அதன்நிறம் செம்மையும் பொன்மையும். சந்திரனாகிய கண்ணிற்றோன்றிய மணி பதினாறு பேதமுடையது. நிறம் வெண்மை. அக்கினிக்கண்ணிற் றோன்றிய மணி பத்துப்பேதமுடையது. நிறம் கருமை. பிராமணர்களுக்குவெண்ணிற மணிகளும் அரசர்களுக்குச் செந்நிறமணிகளும் வணிகர்களுக்குப்பொன்னிற மணிகளும் சூத்திரர்களுக்குக் கருநிறமணிகளும் உரியனவாம். அவைகாய்க்குமரங்களும் முப்பத்தெட்டு விதங்களாகும். ஒருமுகம் இருமுகமணிகள் சிவசொரூபமாம். பிரமகத்திதோஷமும் பசுவைக்கொன்ற பாவமும் நீங்கும். மூன்றுமுக மணிகள் அக்கினிவடிவாம். அம்மணிகளை அதிகமாக அணிந்தால் அநேக பெண்களைக்கொன்ற பாவநீங்கும். நான்குமுகமணிகள் பிரமதேவர் வடிவமாம். அம்மணியணியின் மனிதரை வதைத்த பாவம் மாறும். ஐம்முகமணிகள் காலாக்கினி வடிவம். உணவின் குற்றங்கள் நீங்கும். ஆறுமுகமணிகள் சுப்பிரமணியசொரூபம். பிரமகத்தி தோஷம் நீங்கும். எழுமுகமணி ஆதிசேடவடிவமாம். அம்மணிகளாற் பொற்களவுநீங்கும். எட்டுமுகம் விநாயகவடிவம்அவைகளாற் குருபத்தினியைமருவியபாவம்நீங்கும். ஒன்பதுமுகமணிகள்வயிரவசொரூபம். அம்மணிகளணியின் முத்தியும் புத்தியும்உண்டாம். இடக்கையில் மாலையாகத்தரித்தால்கோடி பிரமகத்திதோஷம் நீங்கும். பத்துமுகம் விஷ்ணுசொரூபம். அவற்றாற் பேய், மிருகங்களால்துன்பமில்லை. பதினொருமுகமணி ஏகாதசருத்திரசொரூபம். அவற்றால்அதிக யாக பலன்உண்டாம். பன்னிரண்டுமுகமணி ஆதித்தர் பன்னிருவர் வடிவம். அம்மணிகளால் அநேக அசுவமேத யாக பலன் ஆகும். சீரக்கொலைநீங்கும். பதின்மூன்றுமுகமணிகள் சுப்பிரமணிய சொரூபம். அம்மணிகளணியின் போகம் எண்சித்திகள் உண்டாம். எல்லாக் கொலைப் பாவங்களும்

நீங்கும். பதின்மூன்று முகமணிக்குமேற்பட்ட மணியில்லை. குடுமியில் ஒருமணியும் சிரசில் முப்பத்தாறுமணியும் கழுத்தில் முப்பத்திரண்டுமணியும் மார்பில்நூற்றெட்டுமணிகளும்கைகளிற்பன்னிரண்டுமணியும் காதுகளில் அவ்வாறுமணியும் தரிக்கத்தகும். அப்படித் தரித்தால் ஆயிரம் யாகபலன் உண்டாகும். முற்காலத்தில் உருத்திராக்ஷப்பொதிசுமந்த ஒரு கழுதை காட்டுவழியாய் விந்தமலை சென்று உயிர்விட்டுக் கைலையில் நூறுகற்பகாலம் வாழ்ந்திருந்தது. வெள்ளி, பொன், முத்து, பவளம் முதலியவற்றை இடையிடையிட்டு, முகத்தோடு முகம்பொருந்தக் கோத்துத்தரிப்பது நன்று. எல்லாரும் எக்காலமும் தரிக்கலாம். பஞ்சாக்ஷர செபஞ்செய்து தரிக்கின் மிகவும் நன்று. புண்ணியகருமம், சிவபூசை, தவம் முதலியன செய்யுங்காலங்களில் தரித்தல் நல்லது. எல்லாப் பாவிகளும், இழிந்த உயிர்களும் தரித்தால் ஞானக்கண் பெறுவது சத்தியம். உண்மைத் தவமுடையவர்கள் எந்தக்காலங்களிலும் தரித்திருப்பார்கள். இறக்குமுன் ஆயிரமணிகளை அணிபவர்கள் பெருமையை அளவிட்டுச் சொல்வது அரிதாகும். சிரம், காது, கழுத்து, மார்பு, கைகள், புபங்கள், மணிக்கட்டுகள்இவற்றில் தரித்தவர்கள் சிவசொரூபமாவார். உருத்திராக்ஷமாலையைப் பஞ்சாக்ஷர செபஞ்செய்து தரித்தவர்களைச்சிவபெருமான் பிரியாது உடனிருப்பார். அவர்கள் சென்ற இடம் மோக்ஷம். அவர்களைத் தரிசித்தவர்கள் தேவர்கள். இங்ஙனம் நாதசன்மாவானவர் அனவர்த்தியைக்கு கூறுதலும், அனவர்த்தியை அடிபணிந்து கால், கை, காது, தலை, கண் இவைகளைப் பேதமில்லாமற் பெற்றவர்களுக்கே சிவபூசை முதலியவை சித்தியாகும். இவ்வுறுப்புக்களில்லாதவர்களுக்கு எவ்வகை முத்தி சித்தியாகும். இதனைச் சொல்லியருளல்வேண்டும் என்று வினவினர்.

திருச்சிற்றம்பலம்.

பதினைந்தாவது

சிவகீர்த்திச் சருக்கம்.

அனவர்த்தியையே! நீ கேட்பாய். கலியுகவலிமையால் எண்ணிறந்த உயிர்கள் யாவும் சிறந்த தலங்களில் இருமையின்பங்களைப் பெறலாமல்லது மற்றொன்றினாலும் முடியாது. அத்தலங்களுள்ளும் விருத்தாசலத்திலல்லாமல் வேறொரு தலங்களிலும் எளிதில் முடி

யாது. ஆதலால் உடம்புநீங்குமுன் ஒருவருஷம்வரை அத்தலபுராணத்தைப்படித்தாலும்கேட்டாலும்துதித்தாலும் அந்தியத்தில்துதித்தாலும் முத்தியைப்பெறுவர். ஒருவர் அரகரா சம்போசங்கரா மகேசா அம்பிகா மகாதேவா புராந்தகா நீலகண்டா என்று துதித்தால் இளங்கன்றுக்கிரங்கி வரும் பசுவைப்போற் பரமசிவனும் விரைந்துவந்து காத்தருள்வார். மரத்திலுள்ள பறவைகளுக்கு ஒரு கல் போதுமாறுபோலச்சிவநாமங்களையுச்சரித்தலே பாவங்களனைத்தும்பறந்துவிடும். முத்தியுமடைவர். சிவ சிவ என்று செபித்தவர் எதிரே சிவபெருமான் பிரியாதவராய்த் திருநிருத்தஞ்செய்தருளுவர் யமனும் பணிவான். அவர்கள் முகத்தில் நான்கு வேதங்களுமிருக்கும். பிறவிக்கடலில் மூழ்கார். புலையராயினும் மாணுந்தத்தல் துதித்தவர். சிவசாரூபமாவர். ஒருவன் செவியில் கேட்கும்படி சிவ சிவ என்று உச்சரித்தால் அவன் பாவமுழுதும் நீங்கும். அவனுக்குப் பிறப்பும் இல்லை இறப்பும் இல்லை. ஒருவன் சிவ சிவ என்று மூன்று தரம் உச்சரித்தால் ஒரு மொழிக்குச் சிவன் தமது சிவலோகத்திற் சேர்த்தருளுவர். மற்றையிருமொழிகளும் சிவன் மேல் பாக்கியாக இருக்கும். பூசைதருமஞ் செய்யாதவனுப் சிவனைத் துதித்தாலும் இலக்ஷுமி சரஸ்வதி எந்நாளும் நீங்காமலிருப்பார்கள். எல்லாப் பதவிகளும் உண்டு. சிவநாமத்தை உச்சரிப்பவர்களுக்குத்தீமையில்லை.

பிரதோஷகாலத்திற் பஞ்சாக்ஷரசெபஞ்செய்து நந்திதேவரின் பீசந்தொட்டு இருகொம்புகளினடுவில் சிவபெருமானைத்தரிசித்தால் தருமமும் தவமும் பெருகும். பாதத்திற் பாதம் படும்படி நடந்து தியானம் தோத்திரஞ்செய்து குவித்து ஒருதரம் வலம் வந்தால் பல கோடிதரம்வலம்வந்தபலன்உண்டாகும். யமபயமும்இல்லை. மூன்று முறை வலம் வரின் தீயபிணிகள் தீரும். ஐந்து தரம் செய்யின் சந்தான முதலிய சம்பத்துண்டாம். நூறுதரம் செய்யின் பிரமகத்தி பாவம் நீங்கும். ஆயிரந்தரஞ்செய்தால் ஆயிரங்கண்ணனுவான். இடமாக வலம் வரின், பிறவித்துன்பம் இல்லை. வலமும் இடமுமாக வலம் வரின் ஒன்றுக்குக் கோடி மடங்கு பலன் கூடும். உள்மதில் புறமதில் வலம் வருதல், அங்கப்பிரதக்ஷிணம் இவை செய்தல் ஒன்றுக்குப் பல கோடி மடங்கு பலன் தரும். சந்நியாசி இடமாகவும் பிரமசாரி வலமாகவும் பிரதக்ஷிணஞ்செய்தால் ஒன்றுக்கொன்று அநேகமடங்கு பலன் ஆகும். ஆதலால் அறிஞர்கள் வலம்

வராமலிரார். விபூதி ருத்திராக்ஷந் தரித்து ஐந்தெழுத்தோதிப்பரம சிவனைப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கிச் சிதம்பரத்திலாயினும் விருத்தாசலத்திலாயினும் அடியார்களைப் பூசித்துத் திருப்பணி செய்து தேகாந்தத்தில் இரதத்தை யுட்கொள்வோர்களையல்லாமல் வேறொருசிவனை யாம் அறியோம்.

திருச்சிற்றம்பலம்.

பதினாறாவது

கோபர்வதச் சருக்கம்.

அனவர்த்தியையின் ஆசைக்கு இணங்கிக் கோபர்வதத்தின் பெருமையை நாதசன்மா கூறுகின்றார். முற்காலத்தில் திருக்கைலாசமலையிலிருந்து சிவகணங்களுடன் விருத்தகிரிக்குளெழுந்தருளிய சிவபெருமான், உமாதேவியாரை நோக்கி, "தாருகாவனத்து முனிவர்களின் தவ வலிமையையும், முனி பத்தினிகளின் கற்பையும் சோதிக்குமாறு விஷ்ணுவாகிய மோகினியுடன் நாம் செல்லுகின்றோம். நீ இவ்விருத்தகிரியின் வனத்தில் வடகீழ்த்திசையில் இருப்பாய்" என்று கூறி நந்தியையும் உடனிறுத்திச் சென்றருளினர். தேவியார் அவ்வனத்தில் ஒரு சிவலிங்கத்தையும் தீர்த்தத்தையுங் கண்டு நந்திநாதர் பணிசெய்யப் பூசித்தார். அதனால் அத்தலம் நந்திதேவர்பேரால் கோபர்வதம் என்றும், சத்தியின்பேரால் சத்தீச்சரம் என்றும் பெயர் வழங்கிவருகின்றது. அப்பொழுது சிவபெருமான் தாருகாவனத்தினின்றும் சத்தீச்சரர் என்னும் இலிங்கத்தினிடம் தரிசனந் தந்தருளினர். தேவியார் வணங்கிப் பூசித்து "இப்பர்வதத்தில்வந்து தானதர்மங்களைச்செய்கின்றவர்கள் சகல செல்வங்களையும், ஞானகங்கையில் மூழ்கினவர் ஞானத்தையும், தேவரீர் திருவடி வணங்கினவர் சிவபதவியையும் பெறுதல் வேண்டும்" என்றுவிண்ணப்பஞ்செய்தலும் சிவபெருமானும் அவ்வரங்களை அவ்வாறே அநுக்கிரகஞ்செய்தருளினர். கோபர்வதத்தில் கங்காஸ்நானஞ்செய்து கடவுளைவணங்கி வாய்பேசாதுநூற்றெட்டுத்தரம் வலம்வந்து அருச்சித்து, குருவுபதேசப்படி திருவைந்தெழுத்தைப்பன்னிரண்டுலக்ஷமுருச்செபித்தவர்கள் சிவசத்தியமாய்ச் சிவபதவி சேர்வார்கள். அப்பர்வதத்தில் வசித்து வரங்களைப்பெற்றவரும் கணநாதரானவரும் நற்கதிபெற்றவரும் இத்தொகையினர்

என்றுளவரும் அளவிட்டுரைப்பது அரிது. அங்கேகருணாபரிபூரண ரென்னும் ஒரு கணநாதர்சேவிப்பவர்களுக்கு வேண்டியவரங்களைக் கொடுத்தருள்வார். அக்கணநாதரை ஒரு பாவி பார்த்தான். அவர் அவனை ஆட்கொள்ளவிரும்பி இவன் யாரென்று ஞானக்கண்ணாலா ராய்ந்து இவன் பெண் வதைமுதலிய பெரும்பாவங்களைச் செய்து மிகவும்இழிந்தவன்: அந்தோ இவனுக்குப் பாகதியில்லையென்று நினைந்து அவனைத்தமது சந்நிதியில் நெடுந்தூரத்தில் நிற்கும்படி அருளினர். அவன் அநேகநாளாய் நின்றளவில் பாவங்கள்யாவும்பாம் பின்தோல் உரிவதுபோல நீங்கினமையால் நாடோறும் கங்கையில் மூழ்கிச் சத்தீச்சரரையும் கணநாதரையும் வலஞ்செய்து வணங்கி சருகுஅருந்தி நீர்பருகித் தவங்கோலம் பூண்டு சகலவினையும்நீங்கி நின்றனன். கருணாபரிபூரணர் அவனை அருகிலழைத்து "நீ எந்நாடு? உன்பெயர்யாது? நீ இவ்வனத்துக்கு ஏன்வந்தாய்சொல்" என்று வினவலும் அவன் "சுவாமீ, நெடுந்தூரத்திலுள்ள சுந்தரநாட்டிற் பிராமணகுலத்திற்பிறந்து துருவிநத்தன்என்னும் பெயருடையனாய்ப் பலபாவங்களைச்செய்து இந்தவனத்திலும் வழிமறித்துப் பொருள் பறிக்கவந்தேன். பிறவிகுருடனுக்குக்கண் பெறும்படி புண்ணிய தீர்த்தம்கிடைத்ததுபோலப் பாவியேன்முன் தேவரீர் வெளிப்பட் டுத்தோன்றியருளினீர். அதனால் மருள்நீங்கி மனந்தெளிவுற்றேன் உண்மைஞானத்தையுபதேசஞ்செய்தருளும் "என்று அவர் திருவடி வணங்கினான். அதுகேட்ட கருணாபரிபூரணர் "நீ இப்பதிக்கு வந்த பொழுதே உன்பாவமனைத்துமநீங்கின, மேலும் கங்கையில் மூழ்கிச் சத்தீசுரர் திருவருளால் சகல நன்மைகளும் சித்திபெற்றாய், நீ எப்போதும் இங்கு இருப்பாய்" என்றுரைத்துத்தவத்தையும் ஐந் தெழுத்தையும் உபதேசஞ் செய்தருளினர். அவனும் மெய்ஞ் ஞானியாய், சத்தீசுவரர்திருவடியில்இரண்டறக்கலத்தலாகிய அத்து வித முத்தி பெற்றனன். இக்கோபர்வதத்தில் தேவர் மனிதர் யாவ ராயினும் மூன்றுநாள் விஷய வாசனையின்றி வசித்தாலும் சத்தீசர் திருவடியடைவார்கள். சுற்றத்தோடிருந்தவரும் சிவசாரூபமாவர்.

திருச்சிற்றம்பலம்.

பதினேழாவது
பிருடிதச் சருக்கம்.

முன்னாளில் மகததேசத்தில்வேதமுணர்ந்தபிருடிதன் என்னும் பிராமணன் தன்நன்மனைவி முருசியோடு பூமிப்பிரதக்ஷிணஞ்செய்து பிரணவப்பதி துவாரகை கங்கை கன்னியாகுமரி முதலிய சிவஸ்தல யாத்திரை செய்து துவாரகைக்கு வந்து ஒரு சிவயோகியைக் கண்டான். அவர் நீங்கள் எங்கேசென்றீர்கள் என்று கேட்க, பிருடிதன் "நானும் என் மனைவியும் பூமியை வலஞ்செய்து கொண்டு சிவாலயமுழுவதையுந் தெரிசித்து வருகின்றோம்" என்று கூறினான். யோகியானவர் அதுகேட்டு நகைத்து நீங்கள் விமானத்தில் வாராது பெரிதும் கால்நடையாக வந்தீர்கள். சித்தி பெற்ற ஒருதலத்திற் காவது செல்லவில்லை. மேலும் சென்ற பொழுதே தேவவிமானம் வருகின்ற தெய்வத்தலங்கள் பல உண்டுஎன்று சொன்னதும், அவ்விருவரும் வணங்கி அத்தலங்கள் யாவை என்றுகேட்க, யோகியார் கண்டகி, பீமை, கிருஷ்ணவேணி, மணிகர்ணிகை, சரயு, நர்மதை, மாகாளம், பாவநாசம், சந்திரபாகை, பரிதிபுரி, மதுரை, சிந்து, கோமதி, காவேரி, திருவானைக்கா திருமயிலாடுதுறை திருவண்ணாமலை திருவாரூர் சிதம்பரம் திருத்துருத்தி திருமழபாடி சுந்தரகிரி திருவாஞ்சியம் திருநெய்த்தானம் திருவிடைமருதூர் திருவாவடுதுறை திருக்கோடிகா திருமுதுகுன்றம் கோபருப்பதம்இவை மேலான தலங்களாம். இத்தலங்களைத்தரிசிக்காது விட்டால் முத்தி கிடைப்பதரிதுஎன்றுசொல்லியருளினார். அவ்விருவரும் அதுகேட்டு நாங்கள் நெடுவழிநடந்த பிரயாசத்தினால் இனிச்செல்லுதல் அரிது தேவரீர் திருவருள்செய்யவேண்டும் என்றுகூறினார்கள். சிவயோகியாரும் சித்தமகிழ்ந்து நீங்கள் இத்திருநீற்றை நெற்றியில் தரித்துக்கொண்டதும், கோபர்வதத்தை அடைவீர்கள். அங்கு உங்கள் பிறவித்துன்பம் நீங்கும்படி மூன்றுநாள் சிவனைப் பூசை செய்யின் இஷ்ட சித்திகளைப்பெறுவீர்கள்" என்று கூறி விபூதிப்பிரசாதம் கொடுத்தருளினார். அவ்விருவரும் திருநீற்றை விரைவில் நெற்றியிற்றரித்தலும், கோபர்வதத்தில் அடைந்து கங்கையில் மூழ்கிச் சத்தீச்சார்திருவடிபணிந்து மூன்றுநாள் ஊண்உறக்கமின்றிப் பஞ்சாக்ஷர செபஞ்செய்தார்கள். அத்தருணம்சத்தீச்சரர் சத்தியுடன் இடபாரூடராயெழுந்தருளித் தரிசனந்தருதலும், அவர்கள் மனமகிழ்ந்து பணிந்துநின்றனர். அப்பெருமான் அவர்களுக்கு வேண்

டிய வரங்களையுங்கொடுத்து ஒரு தெய்வ விமானமுந் தந்தருளினர். அவ்விருவரும் அதில் ஏறினதும் சிவசாரூபம்பெற்று எல்லாத் தலங்களிலும் உலாவிச் சத்தீச்சரர் திருவடி சேர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்.

பதினெட்டாவது
சசிவன்னச் சருக்கம்.

சிவபெருமான் விஷ்ணுவை நோக்கித் தவமுனிவர் செய்யுந் தரிசனத்தின் பெருமையைக் கேட்பாய் என்று திருவாய்மலர்ந் தருளுகின்றார். "பாவவெச்சன்மகன் சசிவன்னன் என்பவன் அடியாரையும், உன்னையும், எம்மையும், வேதங்களையும், விபூதியையும் நிந்திப்பதே கல்விபாகவும், கொலைசெய்வதே விரதமாகவும், தீமைகள் பலபுரிந்து பொருள்பறிப்பதே கேள்விபாகவும், பொய், குறளை வன்சொல் இவையுடையனுப், அடுத்தவர்களைக் கெடுப்பதே குலாசாரமாகவும் கொண்டு மனம் வாக்குக் காயங்களினற் பழி பாவங்களைச்செய்து வருதலினல், பேயும் நோயும் சூழ்ந்து வருந்த, மூர்ச்சித்துக்கிடந்தான். இவன் சுற்றத்தவர்களாய்ச் சுவர்க்கஞ்சென்று தேவரானவரும் இவனது பழிபாவங்களால் நரகில் வீழ்ந்தனர். இப்பாதகன் வருவானே யென்று நரகமும் நடுங்கிற்று. சசிவன்னன் துன்பத்தைத் தந்தையானவன்கண்டு சகியாது, தேவபத்தன் என்னும் தெய்வ மாதவனை வணங்கித் துதித்து, தன் புதல்வன் தீமைகளை யெடுத்துக் கூறுதலும், அவர் "மறையவனே பழமலையின் கண்ணுள்ள கோபர்வதத்தில் சத்தீச்சரத்தில் முன் பிரமா இந்திரன் முதலியதேவர்களும் அசுரர்களும் கடவுளைப் பூசித்துத் தங்கள் நற்பதவிகளை பெற்றார்கள். நீயும் அங்கே சென்று மாநந்தி பாராயணன் என்னும் மகானை நீங்காதிருந்து தரிசனஞ்செய்தால் உன்புதல்வன் பிணிகள்பலவும் ஒழியும் என்று" அருளினர். அவருபதேசப்படி அவன் தன்புதல்வனோடு கோபர்வதம்சென்று கங்கையில் மூழ்கிக்கடவுளை வணங்கித்துதித்து அம்மகானையும் வணங்கித் தன்புதல்வன்செய்த வஞ்சகச்செயல்களை விண்ணப்பஞ்செய்தனன் அம்மாநந்திபாராயணர் கடைக்கண்ணால் நோக்கியருளினதும் அச்சசிவன்னன் பாவமனைத்தும் அகன்றன. அதன்பின் அந்தயோகீசுவரரின் அநுமதிப்படி அவன் பலதொண்டுகள்செய்து பேய்பிணி

யாவும் நீங்கப்பெற்று ஞானியாய் மோக்ஷமடைந்தான். அவன்பிதாவும்பிதிர்க்களுஞ்சிவலோகஞ்சேர்ந்தார்கள். அவன் ஆசைமனைவியும் அக்கதிசேர்ந்தனள். விஷ்ணுவே இன்னும் பெரியோர் பெருமைகளைச்சொல்லுகின்றேன்கேள்.

சுவகையென்னும் வேசியானவள் செல்வர்முதலிய நல்லவர் பலரையும் வஞ்சகமாயவலையில் மயக்கிப்பொருள்பறித்துத்தீமை பலபுரிந்து பழிபாவங்களுக்கு அஞ்சாது திரிந்து பலபிணிகளால் வருத்தமுற்று அவயவங்கள் அழிந்து நின்றாள். அவள் ஒருசிவயோகியாரைக்கண்டு வணங்கிப்பாதபூசைசெய்து அமுதுசெய்வித்து அவர்பரிகலப்பிரசாதமும் பாததீர்த்தமும் உட்கொண்டதும் கடும்பிணிகள்யாவும் நீங்கி அவரால் ஞானோபதேசம்பெற்று அவர் பாதங்களைத்தலைமேற்சூட்டலும் பாவமுழுது நீங்கி எமதுதிருவடியிற்சேர்ந்தாள். அவள் சுற்றத்தவரும் சுவர்க்கம்சேர்ந்தார்கள்.

விஷ்ணுவே! அடியார்களுக்குச்செய்த நன்மைகள்யாவும் நமக்குச் செய்தனவாகும். அவரிடத்தில் எப்போதும் விருப்பத்துடனிருந்தருள்வோம்'' என்று சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினார். மகாவிஷ்ணுவும், பரமசிவன் திருவடிகளைப்பணிந்து ஞானோபதேசம்பெற்று, சிதம்பரத்தில் நிருத்ததரிசனம் பெற்றார். பிறவியையும் இயமனையும் நரகத்துன்பத்தையும் வேண்டினால் அடியார்களைத்தூற்றுங்கள். அல்லது அருள்வளரும் செல்வத்தையும் முத்தியையும் விரும்பினால் அடியாரைப்போற்றுங்கள் என்று மன்றுளாடியாகிய திருமுதுகுன்றநாதர் அருளிச்செய்து மறைந்தருளினர். திருமால் நடராசப்பெருமானை வணங்கித்துதித்துத் தமது வைகுண்டத்தையடைந்து உண்மை நிஷ்டையிலிருந்தார். நிருத்தஞ்செய்யுமிடம் சிதம்பரமென்றும் இருக்குமிடம் விருத்தாசலமென்றும் கூறியிருத்தலால் இரண்டும்சமம்என்று தெரிந்தோம்.

இவ்விருத்தாசல புராணத்தைப்பூசித்தவர்களும் எழுதினவர்களும் படித்தவர்களும் பொருள்சொன்னவர்களும் அதைச்சிவசந்நிதியில் துதித்தவர்களும் துதிப்பதைக்கேட்டவர்களும் பாவங்கள் நீங்கப்பெற்று இஷ்டசித்திகளடைந்து இம்மையின்பங்களையும் மறுமையின்பங்களையும் பெற்று வாழ்வார்கள்.

85957

விருத்தாசல புராணம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விளம்பரம்.

இனி, இராமாயணம்முதலிய இதிகாசக்கதைகளும், தலமகிமைகூறும் புராணக்கதைகளும், சரித்திரசம்பந்தமான கதைகளும், அற்புதம்பொருந்திய கற்பனைக்கதைகளும் மிகவும் குறைந்தவிலைக்கு உயர்ந்தபதிப்புக்களாக பிரசுரம் செய்யப்படும்.

இவ்விருத்தாசல புராண வசனப் புத்தகமொன்றின் விலை அணா நாலு. தொகையாய் வாங்குபவர்களுக்குத் தகுதியானகமிஷன் தரப்படும். இப்புத்தகம் கீழ்க்கண்ட விலாசதாரர்களிடத்தில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

வே. சுந்தரம்பிள்ளை,
புத்தக ஷாப், சிதம்பரம்.

சு. இராஜமாணிக்கம்பிள்ளை,
சாவலர் தமிழ்க்கலாசாலை, சிதம்பரம்.

ஸ்ரீ வேலன் பிரஸ்,
மேலசந்நிதி, சிதம்பரம்.

கார்த்திகேயன் பிரஸ்,
மேலவீதி, சிதம்பரம்.